பக்கங்கள்: 13
விலை : 30/-
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 15 சனிக்கிழமை 31.10.2020 கதிர் 356

## இது ரகசியம் அல்ல!

செய்தி வந்தால் அது குறித்து முதலில் விமர்சிக்கப்படும் இடம் ஆசிரிய பீடம்தான். விமர்சனத்தின் பின்னர்தான் 'எடிட்டிங்' மற்றும் விடயங்கள் ஒப்பேறும்.

நேற்றும் அப்படித்தான். கொரோனாத் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் எடுக்கப்படும்

3

# பத்தாயிரத்தைத் தாண்டியது கொரோனாப் பாதிப்பு! நேற்று மாத்திரம் 633 தொற்றாளர்கள் அடையாளம்!!

### நாடெங்கும் பி.சி.ஆர். பரிசோதனையை விஸ்தரிக்க ஆலோசனை

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. இதையடுத்து நாடெங்கும் பி.சி.ஆர். பரிசோதனையை அதிகரிக்க சுகாதார அமைச்சு ஆலோசித்துள்ளது.

நேற்று மட்டும் 633 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தலில் இருந்தவர்களும், சமூகத்தில் இருந்தவர்களுமே

2



## இன்னமுமே சமூகத் தொற்று இல்லையாம்!

ஸ்ரீலங்காவில் 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்ற நிலையில், நாட்டில் சமூகத் தொற்று ஏற்படவில்லை என்று சுகாதார அமைச்சு அடித்துக் கூறியுள்ளது. இருந்த போதிலும், பல பகுதிகளிலும் கிளைக் கொத்தணிகள் உருவாகக் கூடிய வாய்ப்புக்கள் பல உள்ளன என்றும் சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

2

# யாழில் அறுவர்; முல்லையில் இருவர் கொரோனாத் தொற்று நேற்று உறுதி

### கொழும்பிலிருந்து கொண்டு வந்தவர்கள்

**(ந.லோகதயாளன்)**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 6 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பேருக்கும் என வடக்கு மாகாணத்தில் 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என்று யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி 'காலைக்கதிர்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.**

2

## வெளிநாட்டுக் கொள்கையில் நடுநிலைமை தவறினால் மிகப் பெரிய பின்விளைவு நேரும்

### சீன – அமெரிக்க மோதல்கள் தொடர்பில் கோட்டா அரசை எச்சரிக்கிறார் சம்பந்தன்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசு, அனைத்து நாடுகளுடனும் இணைந்து பயணிக்கக் கூடியவாறு புதிதாக - பக்கச் சார்பில்லாமல் - சமாந்தரமான கொள்கைகளை வகுத்துக் கருமங்களை முன்னெடுக்க வேண்டும். இந்தக் கடமையிலிருந்து தவறினால் பாரிய

2

### இந்தியத் தூதர் – சம்பந்தன் சந்திப்பால் அரசுப் பக்கத்தில் சீற்றம்

## எந்த நாடும் இலங்கைக்கு அழுத்தம் வழங்க முடியாது

### கொதிக்கின்றார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சீற்றம்



இலங்கையில் தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்கள், முஸ்லிம்கள் என மூவின மக்களும் வாழ்கின்றார்கள். இந்த நிலையில், தமிழர் விவகாரம் தொடர்பில் எந்த நாடும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியாது.

2

## ஊரடங்கு அமுலால் உயர்தரப் பரீட்சைக்கு செல்ல முடியாத நிலையில் மாணவர்கள்!

### உரிய போக்குவரத்து வசதியை அரசு செய்யவில்லை; ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் குற்றச்சாட்டு





ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகளுக்குச் செல்ல முடியாத நிலை மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் தலைவரான தொழிற்சங்கவாதி ஜோசப் ஸ்டாலின் ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிட்ட போது இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த தாவது:-

2

## மின்னல் தாக்கி தம்பதியர் சாவு! அம்பாறை திருக்கோவிலில் சம்பவம்

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் - சாகாமம் பகுதியில் சேனைப்பயிர் செய்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களின் மீது இடி மின்னல் தாக்கியதில் கணவன் மற்றும் மனைவி உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம்

2

## காட்டு யானை தாக்கி வயோதிபப் பெண் பலி

அநுராதபுரம், கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஹலகம பகுதியில் காட்டு யானையின் தாக்குதலில் வயோதிப பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று

2

## கொழும்பில் மட்டும் 8 நாள்களில் 1,150 கொரோனா நோயாளர்கள்

### மாநகர மேயர் ரோஸி தகவல்

கம்பஹா மாவட்டத்தைத் தொடர்ந்து கொழும்பு மாவட்டத்தையும் கொரோனா வைரஸ் மிரட்டி வருவதால் கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான சுமார் 35 கட்டடங்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களாகப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று கொழும்பு

2

## தான் தப்புவதற்காக அரசியல் கைதிகள் விவகாரத்தை கையில் எடுத்தார் மனோ!

### அரசியல் நாகரிகம் தெரியாதவர் என்று யாழில் போட்டுத் தாக்கினார் சுமந்திரன்



மரணதண்டனைக் கைதி துமிந்த சில்வாவைத் விடுவிக்கக் கோரும் மனுவில் கையெழுத்திட்டு தவறான ஒரு செயலைச் செய்ததில் இருந்து தான் தப்புவதற்காக அரசியல் கைதிகள் விடயத்தைத் தமிழர் முற்போக்

11

## கொழும்பில் மட்டும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்துக்குள் மட்டும் கடந்த 8 நாள்களில் 1,150 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஊரடங்கு அமுலால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனா அச்சத்தால் மேல் மாகாணம் மற்றும் குருநாகல் போன்ற பகுதிகளில் ஊரடங்குச் சட்டமும், முடக்கங்களும் விதிக்கப்பட்டிருப்பதால் உயர்தரப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் செல்ல முடியாத நிலை இருக்கின்றது.

முறையான போக்குவரத்து வசதிகளை அரசு மாணவர்களுக்கு செய்யத் தவறிவிட்டது. அதனால் தினமும் மாணவர்களுக்கு ஆயிரம் ரூபா தொடக்கம் இரண்டாயிரம் ரூபா வரையான பணத்தைப் பிரயாணத்துக்காக விரயம் செய்ய வேண்டிய நிலைமை உருவாகிவிட்டது.

தற்போதைய அரசு பொதுத்தேர்தலுக்கே கோடிக்கணக்கான ரூபாய்களை வீசியெறிந்த நிலையில் மாணவர்களின் நலனுக்காக ஏன் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை? - என்று அவர் கேள்வி எழுப்பினார்.

## காட்டு யானை தாக்கி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முந்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கஹட்டகஸ்திகிலிய - மீமின்னாவல, இஹலகம பகுதியைச் சேர்ந்த சுத்தாகே விமலாவத்தி (வயது 64) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டுக்கு அருகில் சத்தம் கேட்டதையடுத்து கதவைத் திறந்து வெளியே செல்ல முற்பட்டபோது முன்னால் நின்ற யானை தாக்கி வீசியது எனவும், அவ்விடத்திலேயே அப்பெண் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் மேலும் கூறினர்.

## மின்னல் தாக்கி ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று மாலை 6 மணிக்கு இடம்பெற்றுள்ளது எனத் திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் நேற்று மாலை சாகாமம் தேசிய நீர் வடிகால் சபை தண்ணீர்த் தாங்கிக்கு அருகாமையில் உள்ள தமது காணியில் சேனைப்பயிர் செய்கையில் ஈடுபட்டு கொண்டிருந்தபோது மாலை 6 மணியளவில் கனத்த மழையுடன் ஏற்பட்ட இடி மின்னல் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் திருக்கோவில், விநாயகபுரம், பழைய தபாலக வீதியைச் சேர்ந்த 46 வயதுடைய 3 பிள்ளைகளின் பெற்றோரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

குறித்த இருவரது சடலங்களும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## வெளிநாட்டுக் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பின்விளைவுகளை இலங்கை சந்திக்க வேண்டி வரும்.

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ, 'நிலையான வளர்ச்சியுடன் இலங்கை மக்களுக்கு இறையாண்மையும் சுதந்திரமும் இருக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது. ஒரு நட்பு நாடாக அமெரிக்கா அதைச் சரியாக வழங்குகின்றது என்று நாங்கள் நினைக்கின்றோம். ஆனால், சீனா ஆக்கிரமிப்பு நோக்கத்தைக் கொண்டுள்ளது. இலங்கையைச் சீனா வேட்டையாடி வருகின்றது. அந்த நாடு நிலத்திலும் கடலிலும் இறையாண்மையை மீறி வருகின்றது' என்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பலவிதமான கருமங்கள் சம்பந்தமாக சமீப காலத்தில் ஏற்பட்ட தொடர்புகள் யாவரும் அறிந்ததே.

கடல் பாதை மற்றும் உள்நாட்டுப் அபிவிருத்திப் பணிகளில் சீனாவின் பங்களிப்பு வேரூன்றிக் காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகள் தெரிவிக்கும் விமர்சனக் கருத்துக்களை நாங்கள் மதிப்பீடு செய்ய வேண்டும்.

இதையெல்லாவற்றையும் உணர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசு, அனைத்து நாடுகளுடனும் இணைந்து பயணிக்கக் கூடியவாறு புதிதாக - பக்கச்சார்பில்லாமல் - சமாந்தரமான கொள்கைகளை வகுத்துக் கருமங்களை முன்னெடுக்க வேண்டும். இது இலங்கை அரசின் பிரதான கடமை.

இந்தக் கடமையிலிருந்து தவறினால் பாரிய பின்விளைவுகளை இலங்கை சந்திக்க வேண்டி வரும்.- என்றார்.

## எந்த நாடும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் கொழும்பில் கடந்த புதன்கிழமை மாலை திடீரென முக்கிய சந்திப்பு நடைபெற்றது. இதன்போது தமிழர் தரப்பின் பல்வேறு விடயங்கள் குறித்து இருவரும் பேசினர்.

இது தொடர்பில் அரசின் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என மூவின மக்களும் சமவுரிமைகளுடன் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். ஆனால், இந்த ஒற்றுமையைச் சிதறடிக்கும் வகையில் தமிழ் அரசியல்வாதிகள்தான் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். அப்படியான தமிழ் அரசியல்வாதிகளுடன் தமிழர் விவகாரம் தொடர்பில் வெளிநாடுகளின் தூதுவர்கள் தன்னந்தனியே பேச்சு நடத்துவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

குறித்த தமிழ் அரசியல்வாதிகளுடன் மட்டும் பேசிவிட்டு தமிழர் விவகாரம் தொடர்பில் எந்த நாடும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியாது.

இந்த நாட்டில் மூவின மக்கள் வாழ்கின்றார்கள் என்பதை தமிழர் விவகாரம் தொடர்பில் அக்கறை செலுத்தும் நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும். - என்றார்.

## பத்தாயிரத்தைத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 424 ஆக உயர்வடைந்துள்ளது.

6 ஆயிரத்து 123 தொற்றாளர்கள் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 4 ஆயிரத்து 282 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 19 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.

# பெருமாள் கோவில் பாலஸ்தாபனம் தள்ளிவைப்பு



வண்ணை ஸ்ரீவேங்கடேச வரத ராஜப் பெருமாள் ஆலய பலாஸ்தாபன கும்பாபிஷேகம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை (4ஆம் திகதி) நடைபெற விருந்த பலாஸ்தாபன கும்பாபிஷேகமே நாட்டில் நிலவும் கொரோனா நெருக்கடி நிலைமைகளினால் பிற்போடப்பட்டுள்ளதாக ஆதீன மகா சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் இன்று மாலை ஆலயத் தில் நடக்க விருந்த சுமங்கலி தீப பூசையும் இடம்பெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்னமுமே சமூகத் தொற்று ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸ்ரீலங்காவில் கொரோனா வைரஸின் தாக்கம் 21 மாவட்டங்களுக்குப் பரவியிருப்பதாக முன்னணி மருத்துவத் தொழிற்சங்கமான அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்து வருகின்றது. இதன் காரணமாக அரசாங்கம் முன்னரை விடவும் துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அந்த சங்கம் விடுத்துள்ளதுடன், சமூகப் பரவலாக கொரோனா மாறிவிட்டது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும் சமூக தொற்றாக கொரோனா வைரஸ் மாறிவிட்டது என்று கூறமுடியாது என்று சுகாதார அமைச்சின் பேச்சாளரான மருத்துவர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு நேற்றைய தினம் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்:-

நாட்டில் சமூக தொற்று ஏற்படவில்லை என்று எம்மால் உறுதியாகக் கூற முடியும். அதற்கான உறுதிப்படுத்தல்கள் எம்மிடமுள்ளன. ஆனால், சில பகுதிகளில் ஒரே இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே, கிளை கொத்தணிகள் பல உருவாகக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

எனவே நாம் அனைவரும் கவனயீனமாக செயற்படுவோமானால் விரைவில் சமூக தொற்றை நோக்கிச்செல்ல வேண்டியேற்படும். அபாயமான நிலைமைக்கு முன்னால் நாம் நின்று கொண்டிருக்கின்றோம். இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலைமையே தொடர்ந்தும் காணப்படுகின்றதால், அபாய நிலைமை குறைந்து விட்டது என்று கூற முடியாது.

பி.சி.ஆர். பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கமைய இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக் கூடும். எனினும், பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

சுகாதார அமைச்சு மற்றும் பாதுகாப்புத்துறை உள்ளிட்டவை ஒன்றிணைந்து போக்குவரத்தை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. அபாயமான நிலைமை காணப்பட்டாலும் முறையான வழிமுறைகளைக் கடுமையாக பின்பற்றினால் அவற்றிலிருந்து விடுபட முடியும்.

நாளொன்றுக்கு 7000 - 8000 பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கக் கூடியளவிலான தயார்ப்படுத்தல்கள் சுகாதார அமைச்சினால் செய்யப்பட்டுள்ளன. எனினும், தற்போது பழுதடைந்துள்ள இயந்திரம் நாளொன்றுக்கு 7,000 - 8,000 சுமார் மாதிரிகளை பரிசோதனை செய்யக்கூடியது. குறித்த இயந்திரம் வெகு விரைவில் திருத்தப்பட்டு வழமையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.- எனவும் தெரிவித்துள்ளார்.

## யாழில் அறுவர்; முல்லையில் இருவர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். மாவட்டத்தில் வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

கொழும்பிலிருந்து வந்தவர்களே இந்தக் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உடுவிலில் தாய் மற்றும் 10 வயதுடைய மகள் ஆகியோருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாளிகாவத்தையில் வசிக்கும் பெண் தனது மகளுடன், உடுவில் அம்பலவாணர் வீதியில் உதயசூரியன் சந்தியில் வசிக்கும் தனது தாயாரின் வீட்டில் வந்து தங்கியிருந்த வேளை பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தனிமைப்படுத்தப்பட்ட அதேவேளை, மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நேற்றிரவு அவர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மாளிகாவத்தையில் வர்த்தகத்தில் ஈடுபடும் கணவருக்குப் பேலியகொட மீன் சந்தை கொத்தணிப் பரவல் ஊடாக கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வரும் நிலையிலேயே குறித்த பெண் தனது மகளுடன் உடுவிலில் உள்ள தாயார் வீட்டுக்கு வந்து தங்கியுள்ளார் என்று சுகாதார அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தை, தாயார் மற்றும் சகோதரி தொடர்ந்து தனிமைப்படுத்தப்படுவதுடன், அவர்கள் மூவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், வெள்ளவத்தையில் இயங்கும் யாழ். ஹோட்டல் உரிமையாளருக்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அங்கு பணியாற்றிய புங்குடுதீவைச் சேர்ந்த இருவர், வேலணையில் ஒருவர் மற்றும் யாழ்ப்பாணத்தில் ஒருவர் என்று நான்கு பேருக்குக் கொரோனாத் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவர் பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று வந்ததன் அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த வேளையில் நேற்று அவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏற்கனவே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் தற்போது மருதங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். அவர்களில் 7 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 3 பேருக்கு இன்னும் தொற்று இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது - என்றார்.

# இனி இது இரகசியமல்ல

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்த செய்தி ஆசிரிய பீடத்துக்கு வந்திருந்தது. முக்கிய விடயம், பிரதான இடம் கொடுக்க வேண்டும் என்று நான் கூறிக் கொண்டிருந்தேன். அப்போது எங்கள் அலுவலகச் செய்தியாளர் ஒருவர் ஆசிரிய பீடத்துக்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

வந்த வரத்திலேயே *“ஊருக்கடி உபதேசம், உனக்கில்லையடி!”* என்றார் அவர்.

அவரது கூற்று எனக்கு சற்று உறைந்தது. நேற்று முன்தினம் பக்கத்தில் ஒரு திருமண வீடு. வேட்டி, சட்டையோடு அதற்குப் போய் விட்டுத் திரும்பும் வழியில் என்னை அவர் வழி மறித்திருந்தார். முகக் கவசம் இல்லாமல், கலியாண வீட்டிலிருந்து வந்த என்னை *‘கொரோனா கவனம்!’* என்று எச்சரித்துச் சென்றிந்தார் அவர். அதை மனதில் வைத்துக் கொண்டுதான் என்னைக் கிண்டலடிக்கின்றார் என நினைத்து அவரை ஒரு பார்வை பார்த்தேன்.

அவர் அது புரியாமல் *“படங்கள் அனுப்பினேன். பார்த்தீர்களா?”* என்று கேட்டார்.

*“ஆம். பார்த்தேன். அரச அதிபரும் யாழ் செயலக அதிகாரிகள் பலரும் நிற்கின்றார்கள். இரவு விருந்து போல தெரிகின்றது. நீங்கள் விவரம் அனுப்பவில்லையே...!”* என்றேன்.

*“அதுதான் விசயம். ‘ஊருக்கடி உபதேசம், உனக்கில்லையடி’ என்பதுதான் விவரம்”* என்றார் அவர்.

எனக்கு விளங்கவில்லை. என்ன, ஏது என்று கேட்டேன்.

*“நீங்கள் இப்போது பேசிக் கொண்டிருக்கும் விடயம்தான் விவகாரம். ஊரில் அதை, இதைச் செய்யக்கூடாது, கலியாணம், கார்த்திகை, செத்தவீடு, நடத்தக் கூடாது என்று பெரும் வண்டவாளம் பிளக்கின்றார்கள். நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) இரவு யாழ்ப்பாணத்தில் பிரபல ஹோட்டலில் செயலக அதிகாரி ஒருவருக்கு அவர்கள் அளித்த பிரியாவிடை விருந்து இது. ஒருவருக்குக் கூட முகக் கவசம் அணியத் தோன்றவில்லை. இவர்கள் எல்லாம் கூட்டமாகத் திருவிழா நடத்தலாம், செத்த வீடுதான் நடத்தக் கூடாதோ...?. அதுதான் ‘ஊருக்கடி உபதேசம், உனக்கில்லையடி’ என்றேன். அந்தப் பழமொழியோடு இந்த படங்களைப் பிரசுரியுங்கள். மக்கள் புரிந்து கொள்வார்கள்.”* – என்று ‘சூடான’ ஆலோசனை ஒன்று தந்தார் அவர்.

அவர் கூறுவதிலும் ஏதோ ஒரு நியாயம் ஆழமாக இருப்பதாக எனக்குப்பட்டது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே....?

***

இந்தப் பத்தியில் நேற்றுமுன்தினம் நான் எழுதிய விடயம் ஒன்று தொடர்பாக இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் சில தெளிவுபடுத்தல்களை ஓர் அறிக்கை வடிவத்தில் தந்திருக்கின்றார். அவற்றை அப்படியே இங்கு தருகிறேன். அது வருமாறு:–

*“29.10.2020 ஆம் திகதிய காலைக்கதிர் பத்திரிகையின் ‘இனி இது இரகசியம் அல்ல’ என்ற தங்களது பத்தியின் விமர்சனங்கள் சம்பந்தமாக எமது அவதானம் செலுத்தப்பட்டது. இவை சம்பந்தமாக சில தெளிவுபடுத்தல்களைப் பகிர்ந்து கொள்வது ஆரோக்கியமானது என்பதால் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.*

*வடக்கில் பல சபைகளில் அறுதிப் பெரும்பான்மையின்றியே நிர்வாகத்தை தமிழரசுக் கட்சி கொண்டு நடத்துகின்றது. எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். வடக்கில் உள்ள எந்தச் சபையிலும், தமிழரசுக் கட்சி தனிக் கட்சியாக நிர்வாகம் செய்யவில்லை என்பதும் அவை எல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழேயே நிர்வகிக்கப்படுகின்றன என்பதும் தாங்கள் அறிந்ததே. இரண்டு சபைகள் தவிர்ந்த ஏனைய சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லை என்பது 2018லேயே தெரிந்த உண்மை. அதுவே இப்போதைய நிலைமை, புதிதாக எதுவுமில்லை. எனினும், பல்வேறு அணுகுமுறைகளினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவற்றின் நிர்வாகங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டது.*

*மேலும் கரவெட்டி பிரதேச சபை சம்பந்தமாக குறிப்பிட்டுள்ளீர்கள். நீங்கள் குறிப்பிடும் நெருக்கடி 2018 இலும் இருந்ததுதான்.*

*தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு.மாவை சோ.சேனாதிராசா பதவியில் இருக்கும் தவிசாளரை பதவி விலக இடமளித்து ’பொல்லைக் கொடுத்து அடி வாங்கப் போகிறார்’ என்றும், இந்தப் பிரதேச சபை கைவிட்டுப் போவதற்கு வழி செய்திருக்கிறார் என்றும் கூறுகிறீர்கள். இந்த முடிவு கட்சித் தலைவர் தனித்து எடுத்த முடிவல்ல. அது 25.10.2020 ஆம் திகதிய கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவாகும்.*

*கரவெட்டி பிரதேச சபையில் சில காலமாக சில உறுப்பினர்களுக்கும் தவிசாளருக்குமிடையே முரண்பாடுகள் இருந்திருக்கின்றமை உண்மையே. இவற்றின் காரணமாக கருத்து வேறுபாட்டை கொண்ட உறுப்பினர்களும், தவிசாளரும் தனித்தனியாக தலைவரையும் எம்மையும் சந்தித்து பேசியிருக்கின்றனர். அத்துடன் உடுப்பிட்டிக் கிளையினரும் கட்சித் தலைவரைச் சந்தித்துப் பேசியமையுடன் எழுத்து மூலமான ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர். இதனடிப்படையிலேயே மேற்குறிப்பிடப்பட்டுள்ள கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒன்பது உறுப்பினர்களும் சமுகமளித்திருந்தனர். இவர்களில் இருவர் ரெலோவைச் சேர்ந்தவர்கள். இதில் நானும் கட்சியின் நிர்வாகச் செயலாளரும் கலந்து கொண்டிருந்தோம். அத்துடன் தமிழரசுக் கட்சியின் உடுப்பிட்டி தொகுதிக் கிளையின் செயலாளரும் கூட கலந்துகொண்டிருந்தார். இக் கலந்துரையாடலில் தவிசாளர் உட்பட எல்லோரது கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.*

*கட்சியைப் பொறுத்தவரையில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்படல் வேண்டும் என்பதும், தற்செயலாக அது தோற்கடிக்கப்பட்டால் அது தனிநபர் தோல்வியல்ல, கட்சியின் தோல்வியாகவே பார்க்கப்படும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. இதன்போது தம்மோடு முரண்படும் உறுப்பினர்கள் மட்டுமன்றி வேறு சிலரது அழுத்தங்களும் தமக்கு பல அசௌகரியங்களை ஏற்படுத்தியமை தொடர்பாக தவிசாளர் தமது கருத்தைத் தெரிவித்தார்.தமது தனிப்பட்ட காரணங்களும் அவரால் தெரிவிக்கப்பட்டன.*

*எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் யாவரும் சாதகமாக வாக்களித்தால் வரவு – செலவுத் திட்டத்தை நிறைவேற்றத் தம்மால் முடியுமென்றும் அவ்வாறு செய்துவிட்டு, எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து தாம் தவிசாளர் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாகவும் அவரே தெரிவித்தார்.*

*இதற்கமைய சகலரும் வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்பது கட்சியின் பணிப்பாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. கலந்துரையாடலின் முடிவுகள் சகல அரசியல் சூழ்நிலைகளும் ஓரளவுக்கு கருத்திலெடுத்தே எடுக்கப்பட்டன.*

*இதற்கமைய தவிசாளர் தெரிவித்தபடி 2020 டிசம்பர் முதலாம் திகதியுடனான தமது பதவி விலகல் கடிதம் கட்சித் தலைவரிடம் கையளிக்கப்பட்டது.*

*தவிசாளரது பதவி விலகல் கடிதத்தின் மீதான நடவடிக்கை காலக் கிரமத்தில், வரவு – செலவுத் திட்ட அங்கீகாரம் போன்ற விடயங்களைக் கவனத்தில் எடுத்து முடிவு செய்யப்படும்.*

*பதவி விலகல் தொடர்பான தகவல் தெரிந்த தங்களுக்கு அந்த முடிவு எடுக்கப்பட்ட கலந்துரையாடல்பற்றி தெரிந்திராது இருக்கமுடியாது. இவ்வாறான விமர்சனங்களை முன்வைக்கும் போது ஆகக் குறைந்தது அதில் பங்குபற்றிய என்னையாவது தொடர்பு கொண்டு அறிந்த பின்பு எழுதியிருக்கலாம்.*

***நன்றி.***
***சீ.வீ.கே.சிவஞானம்.***
***மூத்த துணைத் தலைவர்***
***(இ.த.அ.க.)”***

இந்த அறிக்கை தொடர்பாக என் அவதானிப்புகள் வருமாறு:–

1. சி.வீ.கே.சிவஞானம் குறிப்பிடுகின்றமை போல வடக்கில் எந்தச் சபையிலும் தமிழரசுக் கட்சி தனியாக நிர்வாகம் செய்யவில்லை என்பதும், அவை எல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழேயே நிர்வகிக்கப்படுகின்றன என்பதும் எவ்வளவு தூரம் உண்மையோ, அதே போன்று, நிர்வாக ரீதியில் தேர்தல் விடயத்திற்கும் கட்சிப் பிரயோக ரீதியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அனைவரும் வீட்டுச் சின்னத்தில் தெரிவான இலங்கைத் தமிழரசுக் கட்சியினராகவே உத்தியோகபூர்வமாகப் பார்க்கப்படுகின்றனர் என்பதும் உண்மையே. அதனாலேயே அப்படி இலங்கைத் தமிழரசுக் கட்சி அச் சபைகளை நிர்வகிப்பதாக நான் குறிப்பிட்டேன்.

2. நிலைமையைத் தெளிவுபடுத்திய அவருக்கு நன்றிகள். உண்மைகளை அவரே தெரிவித்திருக்கின்றார்.

3. நான் ஏற்கனவே குறிப்பிட்ட விடயங்கள் எவற்றையும் இந்த விளக்கம் மறுக்கவேயில்லை என்பதுதான் எனது நிலைப்பாடு. அதனால் மீண்டும் அவற்றை ஒரு தடவை வலியுறுத்த விரும்புகிறேன். நான் நேற்று முன்தினம் குறிப்பிட்டவை இவைதான்:–

*“இது இப்படியிருக்க, இவ்வாறு வடக்கில் பல சபைகளில் அறுதிப் பெரும்பான்மையின்றியே நிர்வாகத்தைத் தமிழரசுக் கட்சி கொண்டு நடத்துகின்றது.*

*அதில் ஒன்று வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேச சபை. அதன் ஆட்சிப் பொறுப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம்தான் உள்ளது. 31 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் தமிழரசுக்கு ஆக 9 உறுப்பினர்களே உள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன தலா ஏழு உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றன.*

*இந்த நிலையில் உள்வீட்டுச் சர்ச்சை காரணமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தவிசாளர் ஐங்கரன் பதவியை விட்டு விலகப் போகின்றார் என அறிவித்திருக்கின்றார்.*

*‘அண்ணன் எப்ப சாவான்; திண்ணை எப்ப காலியாகும்?’ என்ற எதிர்பார்ப்புடன் தவிசாளர் பதவி யைப் பிடிப்பதற்குக் கண் கொத்திப் பாம்பாக அங்கு பலர் காத்திருக்கின்றனர்.*

*அத்தகைய தரப்புகளில் ஒன்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் தந்தையார் இராமநாதன்.*

*கரவெட்டிப் பிரதேச சபையின் சு.க. உறுப்பினர்கள் குழுத் தலைவர் அவர்.*

*சாம, பேத, தான, தண்டம் என எதைப் பயன்படுத்தியாவது பிரதேச சபைத் தவிசாளர் பதவியைக் கைப்பற்றி விடக் காத்திருக்கின்றார் அவர். அதைக் கைப்பற்றுவதற்காக எந்தப் பலத்தையும் அவரால் பிரயோகிக்க முடியும்.*

*இந்தச் சூழ்நிலையில் பதவியில் இருக்கும் தவிசாளரைத் தனது உள்வீட்டுக் கட்சிக் குழப்பங்களுக்காகப் பதவி விலக இடமளித்து, பொல்லைக் கொடுத்து அடி வாங்கக் காத்திருக்கின்றார் தமிழரசுக் தலைவர் மாவை சேனாதிராசா.”*

– இதுதான் நேற்று முன்தினம் நான் எழுதியது. இந்த விடயங்களை நான் திரும்பவும் வலியுறுத்த விரும்புகிறேன். என் வாசகங்களைத் தயவு செய்து பாருங்கள். நான் பிரதேச சபைத் தவிசாளரை மாவை பதவி விலக்குகின்றார் என் எழுதவில்லை. மாறாக, *‘பதவியில் இருக்கும் தவிசாளரைத் தனது உள்வீட்டுக் கட்சிக் குழப்பங்களுக்காகப் பதவி விலக இடமளித்து, பொல்லைக் கொடுத்து அடி வாங்கக் காத்திருக்கின்றார் தமிழரசுக் தலைவர் மாவை சேனாதிராசா.’* – என்றுதான் எழுதியிருந்தேன். அதன் அர்த்தம் தவிசாளரை மாவை பதவி விலக்குகின்றார் என்பதல்ல. தவிசாளர் பதவி விலக மாவை அனுமதிக்கின்றார் என்பதுதான். ஏன் அப்படி மாவை செய்கிறார் என்பது தொடர்பில் எனக்குக் கிடைத்த தகவலைக் கடைசிப் பந்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்தக் கடைசிப் பந்தியின் கருத்துக்குத்தான் சி.வீ.கே. சிவஞானம் தந்த விளக்கம் பொருந்துமாயின் அதை வாசகர்களின் தீர்மானத்துக்கு விட்டு விடுகிறேன். அந்தக் கடைசிப் பந்தி பின்வருமாறு அமைந்தது:–

*“கடந்த பொதுத் தேர்தலில் ஐங்கரன், வேட்பாளர் சுமந்திரனுக்கு ஆதரவாக நின்றார் என்று யாரோ ‘போட்டுக் கொடுத்து விட்டமையால்’ ஐங்கரனை வீட்டுக்கு அனுப்பி, தனது கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து அந்தப் பிரதேச சபை நிர்வாகம் கைவிட்டுப் போவதற்கு வழி செய்திருக்கின்றார் தமிழரசுத் தலைவர் மாவை என்று செய்திகள் வெளியாகியுள்ளன.*

*இவர்கள் திருந்தவே மாட்டார்களா?”*

– இதுதான் அந்தக் கடைசிப் பந்தி.

4. இப்போதும் கூட, அந்தச் சபையில் மீண்டும் ஒரு தலைவர் தெரிவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி (அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) செல்வது *‘பொல்லைக் கொடுத்து அடிவாங்கும்’* வேலையாகத்தான் முடியும் என்று நான் நினைக்கிறேன்.

5. எனினும், சிவஞானம் அவர்களின் விளக்க அறிக்கையில் *‘தவிசாளரது பதவி விலகல் கடிதத்தின் மீதான நடவடிக்கை காலக்கிரமத்தில் வரவு – செலவுத் திட்ட அங்கீகாரம் போன்ற விடயங்களைக் கவனத்தில் எடுத்து முடிவு செய்யப்படும்’* என்று குறிப்பிட்டிருப்பதில் ஏதோ அர்த்தம் பொதிந்திருப்பதாகத் தோன்றுகின்றது. அரசியல் மாய்மாலம் குறித்து அவர் பொடி வைத்து எழுதியிருக்கின்றார் என்றே கருதுகிறேன்.

6. அது உண்மையாயின், இம்முறை தவிசாளர் பதவிக்கு அங்கஜன் இராமநாதனின் தந்தையார் இராமநாதன் காத்திருப்பது, இலவு காத்த கிளியின் கதையாக முடிந்து விடலாம்.

7. அப்படி நடந்தால் சந்தோஷமே. இந்த விடயத்தில் மாவை – சிவஞானம் கூட்டுத் தந்திரோபாயம் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

வாசகர்களே! உங்கள் கருத்து என்னவோ...?

**- மின்னல் -**

## மேல்மாகாணத்தில் எரிபொருள் நிலையங்கள் திறந்திருக்கும்!

மேல் மாகாணத்தில் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள போதிலும், அரச சேவை, பாதுகாப்பு சேவை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் அல்லது திணைக்களங்கள் என்பவற்றுக்கு எரிபொருள் வழங்கும் சேவைக்காக கொழும்பு , கம்பஹா மற்றும் களுத்துறை உள்ளிட்ட மாவட்டங்களில் சில எரிபொருள் நிரப்பும் நிலையங்களைத் திறந்து வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கொழும்பில் 62, கம்பஹாவில் 68 மற்றும் களுத்துறையில் 27 எரிபொருள் நிரப்பும் நிலையங்களைத் திறந்து வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திறந்து வைக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் தொடர்பாக மேலதிக தவல்களை www.ceypetco.gov.lk என்ற இணைய தளத்திற்குள் பிரவேசித்து தெரிந்து கொள்ள முடியும்.

இது தொடர்பில் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தால் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாகாணத் தேர்தல்களுக்குக் கோருவார்களா?

**சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று நேற்று ஒளிப்பதிவு செய்த விவாதக் கலந்துரையாடலில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.**

***“முன்னர் அதிகாரத்தில் இருந்த மைத்திரிபால சிறிசேன – ரணில் தரப்புகளின் நல்லாட்சி அரசில் மாகாணசபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்ட போது, அந்த நடவடிக்கைகளுக்கு தமிழர் தரப்பின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அந்த விடயத்துக்கு ஒத்துழைத்து வரலாற்றுத் தவறு இழைத்தனர். இப்போது புதிய அதிகார பீடம் வந்து விட்டது. மாகாண சபைக் கட்டமைப்பை உள்ளடக்கிய 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அடியோடு நீக்குவது குறித்துப் பேசுகின்றார்கள். புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்தும் பிரஸ்தாபிக்கின்றார்கள். அடுத்த வருடம் நவம்பருக்குள் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலத்தின் இராண்டாவது வருடம் நிறைவடைவதற்குள் – அதாவது 2021 நவம்பருக்கு முன்னர் – புதிய அரசமைப்பு வந்து விடும் என்கிறார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே அதனைக் கூறியுள்ளார். புதிய அரசமைப்பில் 13 ஆவது திருத்தமோ, மாகாணசபை ஏற்பாடுகளோ இருக்குமோ தெரியாது. ஆனால் தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காகவே இந்த மாகாண சபை முறைமை கொண்டு வரப்பட்டது. அதற்கான தேர்தல்கள் நடத்தப்படாமல் – மாகாண சபைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளினால் நிர்வகிக்கப்படாமல் – ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர்களால் தொடர்ந்து நிர்வகிக்கப்படுகின்ற அவலம் தொடர்கின்றது. தமிழர் தரப்பு அமைதியாக ‘மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி’ என்பது போல இதனைப் பார்த்திருக்கின்றது. மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஒட்டுமொத்தத் தமிழினத்தின் நிலைப்பாடு என்ன என்பது வெளிப்படவில்லை. இப்படி மௌனம் காப்பதன் மூலம் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் காலம் இழுத்தடிக்கப்படுவது நீதியானது எனத் தமிழர் தரப்பும் ஏற்றுக் கொள்கின்றது என்ற ஒரு கருத்தை இந்த மௌனம் தந்து விடலாம்.”***

**– இப்படித் தமது கருத்தை முன்வைத்திருக்கின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்.**

**முற்றிலும் சரியான கருத்து என்றே இதைக் கொள்ள வேண்டும்.**

**மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடிப்பது மக்கள் இறைமையுடன் விளையாடும் செயல். மக்கள் தமது இறைமையைப் பிரயோகிக்கும் முறைமைகளில் ஒன்று மாகாண சபைத் தேர்தல் என்று உயர் நீதிமன்றம் சுட்டிக் காட்டிய பின்னரும், இலங்கை முழுவதிலும் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் இத் தேர்தல்கள் நடத்தப்படாமல் தொடர்ந்து ஆளுநர்கள் மூலம் ஜனாதிபதி ஆட்சியே நீடிக்கின்றது.**

**மக்களின் ஜனநாயக உரிமையுடன் விளையாடும் அற்பத்தனம் – அபத்தப் போக்கு – இது.**

**தமிழ்ப் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு இது தொடர்பில் வலிமையான கோரிக்கை ஒன்றை முன்வைக்காமல் இருப்பது பெரும் துரதிஷ்டமாகும்.**

**வரப்போகின்ற அரசமைப்பில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற கூட்டமைப்புத் தலைவர்களின் எதிர்பார்ப்பு நியாயமானதுதான்.**

**ஆனால், ‘அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதை போன்று’ இனி வரப்போகின்ற புதிய அரசமைப்பில் நியாயமான தீர்வுக்கான விடயங்களை உள்ளடக்குவது குறித்து முயற்சிப்பதேயன்றி, இருக்கும் மாகாண சபைக்கான தேர்தலை வலியுறுத்தி நிற்பதில் அர்த்தமில்லை என்ற பாணியில் செயற்படுவதும் முட்டாள்தனமாகும்.**

**தன்னுடைய சொந்தப் பலத்தில் – வலிமையில் – பௌத்த, சிங்களப் பேரினவாதம் புதிய அரசமைப்பை உருவாக்க முயன்ற போதெல்லாம் தமிழர்களின் நியாயமான – நீதியான – கோரிக்கைகளைக் கணக்கில் கூட எடுக்கவில்லை என்பதுதான் எமது பட்டறிவு. 1972 இல் முதலாவது குடியரசு யாப்புக் கொண்டு வரப்பட்ட போதும், 1978 இல் தற்போதைய அரசமைப்பு உருவாக்கப்பட்ட சமயத்திலும் அதுதான் நடந்தது.**

**தற்போதும் கூட அதுதான் நிலைமை. புதிய அரசைமைப்பு உருவாக்கத்துக்குத் தேவையான நாடாளுமன்றப் பலத்தை – மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை – ராஜபக்ஷ அரசு இதுவரை மட்டுமட்டாகத்தான் கொண்டிருந்தது. ஆனால் அரசமைப்பின் இருபதாவது திருத்தத்துக்கு எதிரணியில் இருந்து மாறி, குத்துக்கரணம் அடித்து, வாக்களித்த எட்டு எம்.பிக்களையும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமது நாடாளுமன்றக் குழுவில் இருந்து வெளியேற்றி, அரசுப் பக்கத்துடன் நிரந்தரமாக இணைய வைத்தமை மூலம், புதிய யாப்பு உருவாக்கத்துக்கான வலிமையான பலத்தை ஆளும் தரப்புக்கு உறுதிப்படுத்தியுள்ளது.**

**இந்தச் சமயத்தில், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பெறுபேறாகவும், அதன் வழியில் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலமும் கிட்டிய மாகாண சபைகளுக்குக்கான தேர்தல்களைக் காலம் பிந்தாமல் உடன் நடத்தக் கோருவதுதான் உசிதமான அரசியல் செயல்பாடாக இருக்கும். செய்வார்களா தமிழ்த் தலைவர்கள்கள்?**

## தமிழ்த் தேசிய அரசியலை நசுக்குகின்ற செயற்பாட்டில் பெரும்பான்மை தலைமை!

### உள்ளது என்கிறார் கலையரசன் எம்.பி.



பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் தமிழ்த் தேசிய அரசியலை நசுக்கும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சங்கமன்கண்டி கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

பெரும்பான்மை அரசியல் தலைவர்களின் அடக்குமுறையை எதிர்த்து அரசியல் செய்யவேண்டிய நிலையில் நாங்கள் இருக்கின்றோம். எனவே, இவ்வாறான சூழ்நிலையில் இளைஞர் அமைப்புகளும் பொது மக்களும் விழிப்புடன் இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

கடந்த காலத்தில் தமிழ்க் கிராமங்கள் அபிவிருத்தியில் பின்னோக்கி கவனிப்பாரற்ற அரசியல் ரீதியான அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. இருந்தபோதும் தற்போது எமது மக்களுக்குப் பல அபிவிருத்தியை மேற்கொள்ள பல தடைகள் எழுகின்றன.

பாதிக்கப்பட்டு வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு ஒரு லட்சம் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால் போட்டிப் பரீட்சையில் கலந்து கொள்ளாது வீடுகளில் இருந்தவர்க ளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமை கவலைக்குரிய விட யம். அடிப்படை வசதிகள் அற்ற மக்களுக்கு இந்த வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின் றோம்.

அரசியல் ரீதியான அழுத்தங்கள் தொடராக இருக்கின்றமையுடன் நாட்டில் அநியாயம் மேலோங்கி நிற்கிறது. இவை நிறுத்தப்பட வேண்டும். – எனத் தெரிவித்தார்.

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் இருவருக்குக் கொரோனா உறுதி!

### பலரைத் தனிமைப்படுத்த நடவடிக்கை

கொழும்பில் பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் பாலசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

கொழும்பைச் சேர்ந்த பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்றுமுன்தினம் உறுதி செய்யப்பட்டது.

அந்த இருவரும் நோய் அறிகுறிகளை வெளிப்படுத்திய பின்னர் அவர்களிடம் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், ஜிந்துபிட்டியவிலுள்ள பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொலநறுவையில் கொரோனா சிகிச்சை நிலையம் யாழிலிருந்து 20 தாதியர்களை அனுப்ப நடவடிக்கை

பொலநறுவையில் உள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய 20 தாதியர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளனர். கொரோனோப் பெருந்தொற்றின் மூன்றாம் அலை காரணமாக கொரோனா சிகிச்சை நிலையங்களில் நோயாளர்கள் நிரம்பி உள்ளனர்.

இந்நிலையில் சிகிச்சை நிலையங்களில் தாதியர் பற்றாக்குறை நிலவுகின்றது. அதனால் கூடுதல் தாதியர்களை கடமைக்கு அமர்த் தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் 4 தமிழ் தாதியர்கள் உட்பட 20 தாதியர்கள் பொலநறுவை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பண்டாரவளையில் கொரோனா சிகிச்சை நிலையம் அமைப்பு!

கொரோனா தொற்றுள்ளவர்களுக்கு சிகிச்சையளிக்கும் வகையில், பண்டாரவளையில் கொரோனா சிகிச்சை நிலையமொன்றை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பதுளைக் கிளைத் தலைவர் பாலித்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

பண்டாரவளை அரசினர் வைத்தியசாலை வளாகத்தில், மேற்படி கொரோனா நிலையப் பிரிவு இடம்பெறும்.

இந்தப் பிரிவில் நூறு நோயாளர்கள் சிகிச்சை பெற்றுவரும் வகையில் நூறு கட்டில்கள் போடப்பட்டுள்ளன.

100 நோயாளர்கள் ஒரு தடவையில் சிகிச்சைப் பெறும் வகையில் அனைத்து வசதிகளும், இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன. – எனத் தெரிவித்துள்ளார்.

## கொக்கட்டிச் சோலையிலும் ஒருவருக்குக் கொரோனா!

மட்டக்களப்பு, ஒக்.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் இருவருக்கு கொரனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் டாக்டர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிமுன்மாரி பகுதியில் ஒருவரும் ஓட்டமாவடியில் ஒருவரும் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளனர்.

ஓட்டமாவடியில் இனங்காணப்பட்டவர் பேலியகொட மீன்சந்தை கொத்தணியுடன் தொடர்புடையவர் எனவும் மாவடிமுன்மாரியை சேர்ந்தவர் கொழும்பில் இருந்து வந்தவர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் குறித்த நபர் கடந்த 27 ஆம் திகதி கொழும்பில் இருந்துவந்துள்ளார் எனவும் தனியார் பேருந்து ஒன்றில் மட்டக்களப்புக்கு வருகைதந்துள்ளார் எனவும் சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அவர் சுகவீனம் காரணமாக மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு சென்ற நிலையில் அங்கு அவர் மீது சந்தேகம் கொண்டு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபருடன் பயணித்தவர்கள், பழகியவர்கள், குறித்த நபர் சென்ற இடங்களில் பழகியவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

# ஊர்காவற்றுறை தம்பாட்டிப் பகுதியில் குடிமனைக்குள் உட்புகுந்தது கடல்நீர்

## உடன் நேரில் சென்று பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கின்றரார் இணைப்புக்குத் தலைவர் அங்கஜன் எம்.பி.





ஊர்காவற்துறைதம்பாட்டியில்கடல்நீர்உட்புகுந்ததால் அப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ் மாவட்ட இணைப்புக்குழுத் தலைவர் அங்கஜன் இராம நாதன் எம்.பி. அப்பகுக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டமையுடன் தடுப்பணை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார் எனவும் தெரிவுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் தீவகத்தின் ஊர்காவற்றுறை கரை யோரப் பகுதி கிராமங்களுக்குள் கடல்நீர் உட்புகுந்துள்ள தால் அப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தம்பாட்டி கிராமத்தில் நேற்று அதிகாலை கடல் நீர் உட்பு குந்துள்ளது.

கடற்கரையை அண்மித்த இடங்களிலுள்ள மக்கள் காலையில் எழுந்து பார்த்த போது தமது வீட்டுச் சூழலில் கடல்நீர்நிறந்திருப்பதைக் கண்டுஅதிர்ச்சியடைந்துள்ளனர்.

குறிப்பாக கடற்கரைகளில் இருந்து சுமார் 50 - 100 மீற்றர் வரையில் கடல் நீர் உட்புகுந்துள்ளதால் அங்குள்ள மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ஆகையினால் வெள்ளம் வரு முன் அணைகட்ட வேண்டும் என்ற அடிப்படையில் தடுப்பு அணைக்கட்டை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் அப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

இந் நிலையில் யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தலைவரு மான அங்கஜன் இராமநாதன் அப் பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிட்டுப் அப் பகுதள் மக்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன் போது அந்த மக்கள் எதிர்நோக்கியுள்ள பாதிப்புக்கள் தொடர்பிலும் ஆராய்ந்த்துடன் இதற்குரிய நடவடிக்கைகளை தற்காலிகமாவேனும் முன்னெடுக் குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் தெரிவித்துள் ளார்.

மேலும் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தினூடாக நிதி ஒதுக்கி தடுப்பணைகளை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஊர்காவற்துறை பிரதேச செயலர் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரும் சம்பவ இடத் திற்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வை யிட்டமையுடன் மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள் எனவும் கூறியுள்ளனர்.

# பூநகரி நெல் வயல்களுக்குள்ளும் திடீரென்று உட்புகுந்தது கடல் நீர்

## உவர் தடுப்பணை பரமரிக்கப்படாததனால்




பூநகரி,ஒக்.31

பூநகரியில் விவசாய நிலங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்துள்ளமையால் விவசாய நடவடிக்கைள் பாதிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சூரமுனங்கு பகுதியில் உள்ள பல ஏக்கர் வயல் நிலங்கள் கடல் நீர் உட்புகுந்த தன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வயலில் நெல் விதைத்து மழையை எதிர்பார்த்து காத்திருக்கும் நேரத்தில் கடல் நீர் வயல்களுக்கு உட்புகுந்தமையால் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் உவர் தடுப்பணையொன்று காணப்படுகிறது. அந்த அணைக்கட்டுகள் புனரமைப்புச் செய்யப்படாமல் கதவுகள் இன்றிய நிலையில் காணப்படுவதனால் கடல் நீல் இலகுவாக உட்புகுந்துள் ளது.

தடுப்பணை சீராக இருக்குமாக இருந்தால் கூட இந்த பெருக்கை தடுத்திருக்க முடியும் எனவும் விவசா யிகள் குறிப்பிடுகின்றனர்.கிளிநொச்சி மாவட்டத்தில் மழை வீழ்ச்சி இம்முறை இதுவரை கிடைக்காதன் காரணமாக விவசாயிகள் மழையை எதிர்பார்த்து காத்தி ருக்கின்ற நேரத்தில் கடல் நீரானது வழமைக்கு மாறாக பெருக்கெடுத்து விவசாய நிலங்களுக்குள் உட்புகுந் தமையால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைந்துள் ளன. கடந்த சில நாள்களாக பூநகரியின் கரையோக கிராமங்கள் சிலவற்றுக்குள் கடல் உட்புகுந்த சம்பவங் கள் இடம்பெற்றுள்ளன.

# துப்பாக்கி, தோட்டாக்களுடன் 8 பேர் கைதாகியுள்ளார்கள்!

திருக்கோவில் மற்றும் ஹிக்கடுவ ஆகிய பகுதி களில் உள்நாட்டு துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் சந்தேக நபர்கள் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

அக்கரைப்பற்று - திருக்கோவில் பகுதியில் பொலி ஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே, எட்டு துப்பாக் கிகளுடன் ஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த ஏழு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமையுடன், இவர் களிடமிருந்து உள்நாட்டு துப்பாக்கிகள் ஏழும் கைப் பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, ஹிக்கடுவ பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, மேலும் ஒரு சந்தேக நபரொ ருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அந்த சந்தேக நபரிடமிருந்து ரி - 56 ரக துப்பாக்கி, உள்நாட்டு துப்பாக்கி, உள்நாட்டு கைக்குண்டுகள் மற்றும் ரி - 56 துப்பாக்கி தோட்டாக் களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசா ரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின் றனர்.

# கொழும்பில் ஊரடங்கு நேரத்தில் எம்.பியின் மகனுக்குத் திருமணம்!

## இடைமறித்து நிறுத்தியது பொலிஸ்

கொழும்பில் நட்சத்திர விடுதியொன்றில் நேற்று இடம்பெற்ற பிரபல அரசியல்வாதி ஒருவரது மகனு டைய திருமண நிகழ்வு பொலிஸாரின் தலையீட்டை அடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

மலையகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரது மகனுடைய திருமணமே இவ்வாறு தடுத்து நிறுத்தப்பட்டது.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தும் ஊரடங் குச் சட்டம் விதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி திருமண நிகழ்வும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES

This refers to our advertisement dated 17.09.2020for the post of Technical Officer (ICT) Grade III.

The Scheme of Recruitment for the post of Technical Officer (ICT) Grade III has been amended as per the Commission Circular No: 21/2018(I) dated 16.10.2020as follows. Other conditions will remain unchanged as in the above advertisement dated 17.09.2020.

**Please note that applicants who have already applied as per external advertisement (17.09.2020) need not apply again.**

**1.TECHNICAL OFFICER (ICT)GRADE III**

**Qualifications:**

(i)Should have passed in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in any Stream

**AND**

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Information Communication and Multimedia Technology/Information and Communication Technology/ Information Technology or Equivalent.

* Preference will be given for who have work experience in ICT

**Salary Scale:** U-MT 1(IIIA)
Rs.31, 625-7x300; 10x355-37,275 p.m.
**Selection By:** Written and/or practical test and an interview
**Age:** Not less than 18 years and not more than 45 years

**Note: Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.**

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment Trust Fund.
5. Free Medical Care.

Applications should be on specified forms issued by the University. Application form, University specified pay-in-voucherand particulars for the above post can be downloaded only from the University website **www.jfn.ac.lk**

Applicants should deposit Rs.100.00at any branch of the People's Bank in favour of **"University of Jaffna"Account No. "162-1-001-6-0000880"**. Applications must accompany with the proof of payment of Rs.100.00 in the University specified pay-in-voucher and copies of relevant certificates.

The envelope containing the duly filled application form must bear Title of the Post on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the **Deputy Registrar/Non-Academic Establishments, University of Jaffna, P.O.Box 57, Thirunelvely, Jaffna on or before 06.12.2020.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**
27.10.2020


# குருநாகல் நகரம் முடக்கம்!

குருநாகல் நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடுமாறு குருநாகல் நகர சபைத் தலைவர் துார சஜ்ஜீவ விதாரண அறிவித்துள்ளார்.

குருநாகல் சபை ஊழியர்கள் 6 பேர் மற்றும் இரண்டு மீன் வியாபாரிகள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டமையையடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குருநாகல் நகர சபை ஊடாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளிலேயே அவர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

குருநாகல் வில்கொடை பகுதியில், தொழிலாளர் குடியிறுப்பில் வசிக்கும் 17 குருநாகல் நகர சபை ஊழியர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே, அவர்களில் 6 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து குருநாகல் வில்கொட பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயலணி தெரிவித்துள்ளது.

# பி.சி.ஆர். இயந்திரம் திருத்தும் பணியை அரசு விரைந்து முன்னெடுக்க வேண்டும்!

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, ஒக்.31

பி.சி.ஆர். இயந்திரங்களை உடனடியாகத் திருத்துதல் மற்றும் புதிய பி.சி.ஆர். இயந்திரங்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரும் செயற்பாட்டை அரசாங்கம் விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டார்.

நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

நாட்டுக்குள் பரவியுள்ள கொரோனா அலையைக் கட்டுப்படுத்தும் செயற்பாடு பின்னடைவை அடைந்துள்ளது.

நாட்டிலுள்ள பி.சி.ஆர். இயந்திரங்கள் பழுந்தடைந்துள்ளமையே இதற்கான காரணமாகக் கருதப்படுகிறது. இந்த பி.சி. ஆர். இயந்திரங்கள் தரமானவையா எனும் சந்தேகம் எழுந்துள்ளது.


இவை பழுதானால், அவற்றைத் திருத்தும் தொழில்நுட்பமும் ஆள்களும் இலங்கையில் இல்லாதமை பெரும் இழப்பாகக் காணப்படுகிறது.

இதனால், நாட்டு மக்கள் பெரும் சவாலுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். சுகாதார சேவையில் ஆள்பலமும் குறைந்துள்ளது.

எனவே, பி.சி.ஆர். இயந்திரங்களைத் துரிதமாகத் திருத்துவதும், புதிய பி.சி.ஆர். இயந்திரங்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டுவருவதும் அத்தியாவசியமாகக் காணப்படுகின்றன.

இதனை அரசாங்கம் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். எந்தவொரு நபரையும் இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளாது, அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சீன தயாரிப்பு கைத்துப்பாக்கி திருகோணமலையில் மீட்பு!



திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பகுதியில் பொலிஸாரால் சிறிய கைத்துப்பாக்கியொன்று ஐந்து சன்னங்களுடன் கண்டெடுக்கப்பட்டுள் ளதாக கந்தளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கந்தளாய் பிரதேசத்துக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகரின் உத்த ரவின் பேரில் இந்தக் கைத்துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தத் துப்பாக்கியைக் கடந்த வியாழக்கிழமை மாலை கைப்பற்றியதாக கந்தளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கந்தளாய் பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைத் துப்பாக்கி கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஈச்சிலம்பற்று பிரதான வீதியிலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் இந்தக் கைத்துப்பாக்கி காணப்பட்டதாகவும், துப்பாக்கியினுள் ஐந்து சன்னங்கள் காணப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது சீனா நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தத் துப்பாக்கி புதிதாக உள்ளதாகவும் ஏதாவது குற்றச் செயல்களை மேற்கொண்டு விட்டு அதனை வீசியிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

துப்பாக்கி தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மத்திய கலாசார நிதிய ஊழியர்கள் சிகிரியாவில் சுய தனிமைப்படுத்தலில்!

சிகிரியா மத்திய கலாசார நிதியத்தின் 10 ஊழியர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிகிரிய மத்திய கலாசார நிதியத்தில் பணியாற்றி வந்த ஊழியர் ஒருவரின் மனைவி, கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அந்த ஊழியரின் மனைவி லாகல கொவிட் -19 சிகிச்சை நிலையத்தில் தாதியாகக் கடமையாற்றுகின்றார்.


இந்த நிலையில் மேற்கூறப்பட்ட ஊழியருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய மொத்தம் 10 ஊழியர்களை அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிகிரிய மத்திய கலாசார நிதியத்தில் அநேக ஊழியர்கள் குருநாகல் மாவட்டத்தில் வசிக்கின்றமையால், அவர்களைத் தற்காலிகமாக பணிக்கு திரும்புகின்றமையைத் தவிர்க்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், சிகிரியாவுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்துள்ளமையாலும், நாட்டின் கொவிட் - 19 நிலைமைகளைக் கருத்திற்கொண்டும் சிகிரியா அருங்காட்சியகத்தை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கொரோனா வைரஸின் தாக்கமும் அதனால் ஏற்படும் குறுகியகால மற்றும் நீண்டகால மனநலப் பாதிப்பும்!

கலாநிதி.க.கஜவிந்தன்.
(முதுநிலை உளவியல் விரிவுரையாளர், உளவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை)



'கொரோனா வைரஸ்' என்னும் தொற்று நோயானது இன்று உலகெங்கிலும் பலஉயிர்களைக்காவுகொண்டு வருகின்றது. சீன நாட்டின் ஏதோ ஒரு மூலையில் தொற்றி தாக்கத்தினை தொடங்கிய இந்த கொரோனா வைரஸ் இன்று உலகளாவிய ரீதியாக பரவிக்கொண்டிருக்ககும் ஒரு தொற்று நோய்க் கிருமியாக உருவெடுத்து அரசாங்கங்களும், மக்களும் சுதாரிப்பதற்கு முன்னரே வெகு விரைவாக பல வழியிலும் உலக நாடுகளில் ஏதோவொரு வழியில் உள் நுழைந்து பலரின் இறப்பிற்குக் காரணமாகி வருகிறது.

இதனை உடல் நோயாக நாம் பார்த்தாலும் இந்நோயின் தாக்கமானது எதிர்காலத்தில் சமூகத்தில் குறுங்கால, நீண்ட கால உளப் பிரச்சினையும், உளப்பாதிப்பினையும் ஏற்படுத்தப் போகின்றது என்பதனையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

உலகளாவிய ரீதியில் மருத்துவத் துறையும், விஞ்ஞானமும் எவ்வளவு முன்னேறினாலும் கொராண வைரஸ் பாதிப்பானது வல்லரசு நாடுகளுக்கும், அபிவிருத்தி அடைந்த ,அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும் ஒரு சவாலாக காணப்படுகின்றது. என்னதான் விஞ்ஞான வளர்ச்சி வானத்தைத் தொட்டாலும், இக் கொரோனா வைரஸ் இன்று மனிதனின் விஞ்ஞான கண்டுபிடிப்பினதும், மருத்துவ வளர்ச்சியினதும் அத்திவாரத்தையே ஆட்டம் காண வைத்துள்ளதென்பது வெளிப்படையான உண்மையே. இது இன்று விஞ்ஞானத் துறைக்கும் மருத்துவத்துறைக்கும் ஏற்பட்ட ஒரு சவாலாக காணப்படுகின்றது. இக் கொரோனா வைரஸ் பற்றி மருத்துவ ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும், சமய , புராண கதைகள் வாயிலாகவும், ஆன்மீக ரீதியாகவும்,புனைக் கதைகலும் விளக்கங்களும் கொடுத்தாலும், அது எந்த அளவிற்கு உண்மை என்பது கேள்விக் குறியாகக் காணப்படுகின்றது.

பொதுவாக ஏனைய தாக்கம் கூடிய, தாக்கம் குறைந்த உடல் நோய்கள் போல் அல்லாது, இதன் தொற்றும் தாக்கமும் வேகமானதும்,வீரியமானதாகவும் பரவி வருகின்றது. இன்று படித்தவர் தொடக்கம் பாமரர் வரை இதன் வைரஸ் தாக்கத்தின் பாதிப்பை ஓரளவு அறிந்தவராகவே காணப்படுகின்றனர்.

வரலாற்றில் எப்போதும் இல்லாதவாறு ஒவ்வொரு நாளும் இது, இதன் தாக்கத்தால் ஒவ்வொரு நாட்டையும், நாட்டு மக்களையும் சுயநலமாக சிந்திக்கத் தூண்டிவிட்டது என்றே கூற வேண்டும். இதன் காரணமாக ஒவ்வொரு நாடும் தத்தமது எல்லைகளை மூடியும், தம் நாட்டு மக்களைக் காக்கவும் முனைப்புடன் நடவடிக்கைகளை செயற்படுத்துகின்றது; இதேவேளை மேலைத்தேய நாட்டவர்களை நோய் கிருமி தொற்றுக்குள்ளானவர் என்ற சந்தேகத்தையும், மனப்பீதியையும் சமூகத்தில் ஏற்படுத்தி விட்டது. இதனால் நாட்டுக்குள் முடங்கிய மக்களுக்கு, இன்று வீட்டுக்குள் முடங்கும் ஓர் மனநிலையை அவர்கள் மத்தியில் இக் கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்படுத்தி விட்டது.

இது மட்டுமன்றி ஒரு இயல்பான வாழ்க்கை வாழ்ந்த மக்களின் போக்குவரத்து, பொருளாதாரம், உணவு, கல்வி, நிர்வாகக் கட்டமைப்பு, சமூக ஒன்று கூடல் போன்ற அடிப்படை அம்சங்களையே இன்று கொரோனா வைரஸின் தாக்கமானது கேள்விக் குறியாக்கியுள்ளது. இதனால் சமூகத்தின் ஒரு பயங்கலந்த வாழ்க்கை முறைமையும், அடுத்து என்ன நடக்குமோ என்று எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையற்ற தன்மையும் மக்கள் மனங்களில் ஆழமாகப் பதிந்துள்ளது. இதனால் சமூகத்தின் இயல்பான வாழ்க்கை பாதிக்கப்பட்டு எதை செய்ய வேண்டும், என்ன செய்ய கூடாது என்ற பல கேள்விக்குறியோடும், சந்தேகத்



துடனும் கூடிய நடத்தைக் கோலங்களை சமூகத்தில் மக்கள் மத்தியில் காணமுடிகின்றது. இதனால் மக்களின் இயல்பு வாழ்வு பாதித்தது மட்டுமன்றி மனநிலைகளையும், மனப்பாங்குகளையும் கூட கொரோனா வைரஸ் பாதிப்பு மாற்றிவிட்டது என்பதை மறுக்க முடியாது.

குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட சமுதாயமானது கொஞ்சம் கொஞ்சமாக மனவடுக்களில் இருந்து மீட்சி பெற்று வரும் இந்த வேளையில் இந்த கொரோனா வைரஸின் தாக்கத்தினால் மீண்டுமொரு போர் சூழலில் வாழ்வதை போல் மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். இவ்வாறான தாக்கமானது போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் ஆழ்மனதில் புதைந்துள்ள பல பிரச்சினைகளுக்குத் தீனி போட்டு வெளியே கொண்டுவந்து, மனப் பாங்குகளையும், நடத்தைக் கோலங்களையும் கணிசமான அளவு பாதிக்கும். இந்த வகையில் இழப்பு, துயரம், பிரிவு, காணமற்போண உறவுகள் போன்ற பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட்ட இச் சமுதாயம் மீண்டும் ஒரு அழிவைச் சந்திக்க போகின்றதா என்ற பயம் ஒவ்வொருவர் முகத்திலும் காணக் கூடியதாக உள்ளது. இதனைப் ஒரு பொருட்டாக சிலர் எடுத்துக் கொள்ளாவிட்டாலும். ஆழ்மனதில் இந்த வைரஸ் தாக்கம் பற்றி பயம் ஒவ்வொரு மனிதனையும் பீடிக்காமலும் இல்லை. இதற்கு , இந்த நோயின் அடிப்படையைக் கண்டறியாததும் அதற்குரிய மருத்துவ முறைகளும்,கொரோனா நோயாளிகளைக் கையாளும் முறைகளும், பல்வேறுபட்ட வதந்திகளும் முக்கிய காரணங்கள் எனலாம்.

இந்த வகையில் மக்கள் மத்தியில் இனம் புரியாத பதற்றத்தை இக்கொரோனா ஏற்படுத்தி விட்டாலும் இது எதிர்காலத்தில் சில உளப்பிரச்சினைக்கும், மனப்பாங்கு மாற்றத்திற்கும் அடிப்படையாக அமையும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இன்று சாதாரண தடிமன், காய்ச்சல், தலைவலி போன்ற பிரச்சினைகளுக்குப் பலர் மருத்துவரை நாடாமல் வீட்டிலேயே தங்களால் இயன்ற வைத்தியத்தை செய்து வருகின்றனர். இதற்கு, மருத்துவ மனைக்குச் சென்றால் கொரோனாப் பாதிப்பு என முத்திரை குத்திவிடுவார்கள் என ஆழ்மனதில் காணப்படும் பயம்தான் முக்கிய காரணமாகும். சாதாரண காய்ச்சல், தலை வலிக்குக் கூட மருத்துவரிடம் செல்லாது மருந்தகத்தில் தமக்கு தெரிந்த மருந்துகளை மக்கள் வாங்கி உபயோ கித்து வருகின்ற சூழ்நிலைக்கு மக்கள் மனப்பாங்கினை இது மாற்றிவிட்டது.

இன்று சாதாரணமாக தும்மினால், இருமினாலகொரோனாவாகஇருக்குமோ என்ற தானாக உருவாகும் எண்ணங்களால் (Automatic Thoughts) மக்களுக்கு இயல்பாக வருகிறது. இதற்கு காரணம் இதன் சாவு எண்ணக்கையே. உண்மையில் இது மக்கள் மத்தியில் குறுகியகால,நீண்டகால மனப்பாதிப்பினையும், மனப் பாங்கு மாற்றத்தினையும் ஏற்படுத்த போகின்றது.

உதாரணம்-ஓர்குழந்தைஒவ்வாமையாலோ, தடிமனாலோ தும்மினால் கூட இது கொரோனாப் பாதிப்பாக இருக்குமோ என்ற பயத்தினை தாய்க்கு அது ஏற்படுத்திவிடும். இதனால் இன்று ஒருவர் சாதாரணமாக இருமி னாலோ, தும்மினாலோ மற்றவர்கள் சந்தேகத்தோடு, கோபத்தோடு, எரிச்சலோடும், பயத்தோடும் குறித்த நபரை பார்க்கும் ஓர் எதிர்மறையான மனப்பாங்கையும்,நடத்தை கோலங்களையும் இது உருவாக்கி விட்டது. இந்தவகையில் பெரிய உடல் நோய்க்கு பயப்படாதவர்கள் கூட இருமலுக்கும், தும்மலுக்கு பயந்து ஒதுங்கும் ஓர் மனப்போக்கினையும் எண்ணக்கட்டமைப்பில் மாற்றத்தினையும்கொரோனாப்பாதிப்புசமூகத்தில்உருவாக்கியுள்ளது.

ஏற்கனவே மனச்சோர்வு, மன அழுத்தம், பதற்றம், கட்டுக்கடங்கா நினைவு நடத்தை, கோபம், பயம், எரிச்சல், வாழ்க்கையில் நம்பிக்கையின்மை, குற்ற உணர்வு, பழிவாங்கும் தன்மை போன்ற உள நோயினாலும், உளப்பிரச்சினையினாலும் பாதிக்கப்பட்டவர்களையும், சாதாரண மக்களையும் இதன் தாக்கம் தூண்டிவிட்டு பல உளம் சார், நடத்தை சார் பிரச்சினைகளையும் ஏற்படுத்தும்.

> இன்று சாதாரண தடிமன், காய்ச்சல், தலைவலி போன்ற பிரச்சினைகளுக்குப் பலர் மருத்துவரை நாடாமல் வீட்டிலேயே தங்களால் இயன்ற வைத்தியத்தை செய்து வருகின்றனர். இதற்கு, மருத்துவமனைக்குச் சென்றால் கொரோனாப் பாதிப்பு என முத்திரை குத்திவிடுவார்கள் என ஆழ்மனதில் காணப்படும் பயம்தான் முக்கிய காரணமாகும்.

01) மனச்சோர்வு **(Depression)**

மனச்சோர்வானது மனிதனை விரக்தி நிலைக்கு இட்டுசென்று தற்கொலைக்கு தூண்டும்; அத்துடன் இது தற்கொலை மனப்பாங்கு, எண்ணங்களை (Suicide Ideation/Thoughts) கணிசமாண அளவு கொண்டுள்ள ஒருவகையான உளநோயாகும். இந்நோயால் தீவரமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு இக் கொரோனாத் தொற்று பாதித்தால் வாழ்க்கையில் நம்பிக்கையற்றவர்களாய், வாழ்க்கை முடிந்து விட்டது என்று எண்ணி, தற்கொலைக்கு முயற்சிப்பார்கள். இதனால் தனக்கு சிகிச்சை அளிக்க வேண்டாமென்ற விரக்தி மனநிலைக்கு செல்வதுடன் சிகிச்சைக்கு ஒத்துழைக்க மாட்டார்கள். அத்துடன் இவர்களுக்கு வாழ்க்கையை முடித்துவிட வேண்டும் அல்லது முடிந்துவிட்டது என்ற மனநிலை காணப்படும். ஆனாலும் சிலருக்கு ஓர் குழப்பமான மனநிலைகாணப்படும்.

02) மன அழுத்தம் **(Stress)**

மன அழுத்தமானது இந்நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கும், கொரோனா பற்றிய பயம் உள்ளவர்களுக்கும் அதிகளவு காணப்படும். இந்நோய் மாறாது என்ற எண்ணம். இதனை நாம் எவ்வாறு எதிர் கொள்ள போகின்றோம் என்றபயமும்இவர்களின்மனதைஆக்கிரமித்துக்கொண்டே இருக்கும். இதனால் நிம்மதியற்றவர்களாய், சிந்தனை குழப்பத்துடன் காணப்படுவார்கள். இவர்களின் மனநிலை எனக்கு ஒன்றும் வேண்டாம், இந்த நோயிலிருந்து தப்பித்தால்,விடுபட்டால் போதும் என்ற மனப்பாங்கும் காணப்படுவதுடன் அமைதியற்றும் காணப்படுவர்.

03) பதகளிப்பு **(Anxiety)** இனம் புரியாத கவலை, பதற்றம்

நோய் தொற்றியவர்களை விட, தொற்றாதவர்களுக்கு பதகளிப்பு , இனம்புரியாத கவலை அதிகமாகக் காணப்படும். இதனால் எந்நேரமும் அந்நோய் தம்மை தாக்கலாம் என்ற பயமும் பீதியும் இவர்களிடையே காணப்படுவதுடன் அவர்களது ஒவ்வரு செயற்பாட்டிலும் நிம்மதியற்றும் இருப்பர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# ‘கொரோனா’வுக்கு ‘முடிவு’கட்ட யாழில் அதிரடி தீர்மானங்கள்

## மாவட்ட செயலக கூட்டத்தில் முடிவு

- ★ 50 பேருடன் வீட்டிலேயே திருமண நிகழ்வு
- ★ மரணச்சடங்கில் 25 பேர் மாத்திரம் அனுமதி
- ★ தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கத் தடை
- ★ விளையாட்டுப் போட்டிகளும் மக்கள் சந்திப்புகளும் பொது நிகழ்வுகளும் ஒத்திவைப்பு
- ★ வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தருவோர் கிராம சேவகர்கள் ஊடாகப் பதிய வேண்டும்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 30

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தற்போதய கொரோனா நிலைமைகள் தொடர்பில் ஆராயும் மாவட்ட கொரோனா செயலணி விசேட கூட்டம் இன்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது முக்கிய தீர்மானங்கள் எடுக்கப் பட்டுள்ளன.

அதற்கமைய திருமணங்களை வீட்டில் நடத்த வேண்டும் எனவும், 50 பேருக்கு மேற்படாதவாறு நபர்கள் கலந்துகொள்ள வேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மரணச்சடங்குகளில் 25 பேர் மாத்தி ரம் அனுமதிக்கப்பட வேண்டும் எனவும், வெளிமாவட்டத்தில் இருந்து மக்கள் வருகை தருவது தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கத் தடை விதிக்கப்பட்டுள்ள அதேவேளை திறந்த சந்தைக்கும் அனு மதி இல்லை எனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்து.

விளையாட்டுப் போட்டிகளை ஒத்திவைத்தல், மக்கள் கூட்டங்களை மற்றும் பொது நிகழ்வுகளை ஒத்திவைக்கவும் குறித்த கூட்டத்தில் முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

பஸ்களில் இருக்கைகளில் மட்டும் இருந்து பயணிப்பதற்கு அனுமதி எனவும், உணவகங்களில் இருந்து உண்ணுவதற்குத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தருவோர் கிராம சேவகர்கள் ஊடாகப் பதிவை மேற்கொள் வேண்டும் எனவும், அரச அலுவலகங்களில் அரச உத்தியோகத்தர்களுக்குத் தகவல் திரட்டு செய்யப்பட வேண்டும் எனவும் முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

ஆலயங்களில் மதகுருமார்களுக்கு மட்டும் அனுமதித்துள்ள அதேவேளை அன்னதானங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவசர நிலையைக் கருதி ஒருங்கி ணைத்த செயலகமாக மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் 7 நாட்களும் செயற்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு அவசர தொலைபேசி உதவி இலக்கமாக 0212225000 அறிவிக்கப் பட்டுள்ளது.

இன்று இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன், மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணப்பாளர் வைத்தியர் ஏ.கேதீஸ்வரன், வடக்கு மாகாண உளநல சேவை பணிப்பாளர் ஏ.கேசவன், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி, யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர், யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பொலிஸ் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், யாழ். மாநகர ஆணையாளர், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள், சுகாதார சேவை சம்பந்தம்பட்ட அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கூட்டம் நிறைவடைந்ததும் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

## குருநாகல் மாநகரில் எண்மருக்குத் தொற்று

குருநாகல் மாநகரசபை அதிகார பிரதேச எல்லைக்குள் 8 பேர் கொவிட் - 19 தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

வில்கொட, வில்கொடவத்தை, உடவல்பொல மற்றும் இந்துல்கொடகந்த ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு கொவிட் - 19 தொற்றுறுதியானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனக் குருநாகல் மாநகரசபை அதிகார பிரதேசத்தின் பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக வில்கொட பகுதியில் இன்று பிற்பகல் முதல் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

## துப்பாக்கியும் வாளும் மட்டக்களப்பில் மீட்பு!!

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சவுக்கடி பகுதியில் இருந்து துப்பாக்கி ஒன்றும், வாள் ஒன்றும் மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரினரால் மீட்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சவுக்கடி கடற்கரையை அண்டிய பகுதியில் உள்ள பற்றைக்காட்டுக்குள் உரப் பைகளினால் சுற்றப்பட்ட நிலையில் குறித்த ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இவை எதற்காகப் பயன்படுத்தப்பட் டன? யாரால் கொண்டுவந்து புதைக்கப்பட்டன? என்பது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## மேல் மாகாணத்தில் பொலிஸ் அதிகாரிகள் 43 பேருக்குக் கொரோனா

மேல் மாகாணத்தில் பொலிஸ் அதிகாரிகள் 43 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த தொற்றாளர்களுடன் தொடர்புடைய 893 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

## யாழ். மீன் சந்தை வியாரிகள் முப்பது பேருக்குச் சோதனை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் உள்ள மீன் சந்தைகளில் விற்பனயில் ஈடுபடும் வியாபாரிகள் பி.சீ.ஆர். பரிசோதனைக்கு இன்று உட்படுத்தப்பட்டனர்.

பேலியகொடை மீன் சந்தையை தொடர்ந்து திருகோணமலை மீன் சந்தையில் விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகள் சிலரில் கொரோனாத் தொற்று இனம் காணப்பட்டதனாலும் நுகர்வோர் இது தொடர்பில் அச்சம் கொள்வதைத் தடுக்கும் நோக்கிலுமே பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குருநகர், பாஷையூர், சின்னக்கடை, நாவாந்துறை, கல்வியங்காடு உள்ளிட்ட 6 அங்காடிகளில் இருந்து தலா 5 பேர் என்ற அடிப்படையில் முதல் கட்டமாக இந்த பரிசோதனை இடம்பெற்றது.


இவ்வாறு மேற்கொண்ட பரிசோதனைகளில் எவருக்கும் தொற்று இல்லை எனக் கண்டறியப்பட்டால் தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சந்தைகள் இயங்கும். இவ்வாறான பரிசோதனைகளை அடுத்த கட்டமாக மரக்கறிச் சந்தைகள் மீதும் தொடர்வது தொடர்பிலும் நடவடிக்கை இடம்பெறுகின்றது.

## வேண்டும்!வேண்டும்!! சர்வதேச விசாரணை

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம்







வவுனியா, ஒக்.30

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் சர்வதேச நீதி கோரி வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, பழைய பஸ் நிலையம் முன்பாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி இன்று காலை இந்த ஆர்ப்பாட்டம் காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ‘எங்கே, எங்கே ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் எங்கே?’, ‘பாடசாலை சென்ற மாணவர்கள் எங்கே?’, ‘வெள்ளைவானில் கடத்தப்பட்டவர்களுக்குப் பதில் தா!’, ‘வேண்டும்! வேண்டும்! சர்வதேச விசாரணை’ - என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தமையுடன் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

சுமார் அரை மணிநேரம் போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார் பின்னர் அங்கிருந்து சென்றிருந்தனர். (100)

# மக்கள் ஒன்றுகூடுகின்றமையை இடர் வலயத்தில் தவிர்க்கவும்!



## ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு

மருத்துவத் துறையிலும் கொவிட் ஒழிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் தேவையான தகவல்களை இலகுவாக அறிந்துகொள்ளக் கூடிய புதிய செயலி (அப்ஸ்) மேல் மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிமுகம்செய்து வைக்கப்பட்டது.

கொவிட் நோய்த் தொற்றாளர்கள், தொடர்புடையவர்கள், தனிமைப்படுத்தல், பி.சி.ஆர். பரிசோதனை சேவைகள், கண்காணிப்பு, தீர்மானங்களை மேற்கொள்தல், நோய்த்தொற்றாளர்களுக்கு கிட்டிய பிரதேசங்களுடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளிட்ட தேவையான பல தரவுகளை இந்த புதிய செயலியின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந்திக்கும் கொவிட் ஒழிப்பு செயலணி கடந்த வியாழக்கிழமை ஒன்றுகூடிய சந்தர்ப்பத்தில் மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தம்மிக ஜயலத் தலைமையிலான குழுவால் புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.

புதிய அபிவிருத்திகள் தொடர்பான தகவல்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அறிந்துகொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாடளாவிய ரீதியில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளின் எண்ணிக்கை 350 ஆகும். அவற்றில் 28 பிரிவுகளில் கொவிட் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

ஏனைய பிரதேசங்களுக்கும் பரவுவதைத் தவிர்ப்பதற்கு முடியுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என செயலணி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

வைரஸ் பரவுவதை தவிர்ப்பதற்கு முதலாவது, இரண்டாவது தொற்றாளர்கள் உட்பட 41 ஆயிரம் பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். நாட்டின் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கிய வகையில் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பல சந்தர்ப்பங்களில் கொவிட் தொற்றாளர்கள் அதிகரிப்பதற்கு காரணமான விடயங்களைச் சரியாக அறிந்து மீண்டும் அவ்வாறு இடம்பெறுவதற்கு இடமளிக்கக்கூடாது.

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக எழுமாறான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் எதிர்பாராத விதமாக பேலியகொடை மீன் சந்தை மற்றும் மினுவாங்கொடையை அண்டிய பிரதேசங்களில் கொவிட் கொத்தணி உருவானது.

பொருள்கள் பகிர்ந்தளிக்கும் வலயமைப்பின் ஊடாக வைரஸ் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவுவதைத் தவிர்ப்பதற்கு அனைத்துத் தரப்பினரதும் உதவி தேவையானதாகும். சுகாதார துறையின் வழிகாட்டல்களை முழுமையாகப் பின்பற்றுவது அனைவரினதும் சமூக பொறுப்பாகும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தம்புள்ளை உள்ளிட்ட பொருளாதார மத்திய நிலையங்களை அண்மித்த பிரதேசங்களில் எழுமாறான பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட வேண்டும். கொவிட் கொத்தணி உருவாகக் கூடிய இடங்கள் தொடர்பில் தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் மேல் மாகாணத்துக்கு பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு சட்டத்தை மீறுவோருக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

எந்தவொரு பொலிஸ் நிலையத்தாலும் ஊரடங்கு சட்ட அனுமதிப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் மிகவும் அவசரமான சந்தர்ப்பங்களின் போது அதற்கு இடமளிக்கப்படும்.

இடர் வலயங்களுக்குள் மக்கள் ஒன்றுகூடுவது தவிர்க்கப்பட வேண்டும். மேல் மாகாணத்தில் திருமணங்கள் மற்றும் சமய நிகழ்வுகள் உள்ளிட்ட மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளுக்கு இடமளிக்க வேண்டாம். - என ஜனாதிபதி தெரிவித்தார்.

## ஓய்வுபெறும் விமானப்படைத் தளபதி ஜனாதிபதி கோட்டாவைச் சந்தித்தார்!



36 வருட சேவையை நிறைவுசெய்து நவம்பர் மாதம் 02 ஆம் திகதி ஓய்வுபெறவுள்ள விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கள டயஸ் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

2019 மே மாதம் 29 ஆம் திகதி விமானப் படை தளபதியாக நியமிக்கப்பட்ட சுமங்கள டயஸ் இலங்கையின் 17 ஆவது விமானப் படைத் தளபதி ஆவார்.

முப்பது வருட பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பெரும் பங்காற்றிய அவர், தனது சேவைக் காலத்தில் வடமராட்சி நடவடிக்கை பதக்கம், பூர்ண பூமி சேவா பதக்கம், தேசபுத்ர விருது, ரணசூர விருது (மூன்று முறை), வடக்கு கிழக்கு நடவடிக்கைகள் பதக்கம், உத்தம சேவா பதக்கம், விசிஷ்ட சேவா விபூஷணய உள்ளிட்ட பல பதக்கங்களை வென்றுள்ளார்.

தாய்நாட்டுக்காக செய்த பணிகளைப் பாராட்டிய ஜனாதிபதி, சுமங்கள டயஸின் ஓய்வுகால வாழ்க்கை வெற்றிகரமாக அமைய வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

## மேல்மாகாணத்தில் உள்ள பள்ளிவாசல்களுக்கு பூட்டு!


மேல் மாகாணத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களையும் மீள அறிவித்தல் வரை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் கலாசார விவகாரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்களுக்கு அமைய வக்பு சபையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிலைமை வழமைக்கு திரும்பும் போது மீள பள்ளிவாசல்களைத் திறப்பது தொடர்பில் அறிவுறுத்தல் விடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நடுக்கடலில் இரு மீனவர்கள் மாயம் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியது!



கொழும்பு, ஒக். 31

இலங்கையை சேர்ந்த இரண்டு மீனவர்கள் நடுக்கடலில் மாயமான சூழ்நிலையில், அவர்களை தேடும் நடவடிக்கையில் படையினர் மற்றும் மீனவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) காலை, இராமேஸ்வரம் மீன் பிடிதுறைமுகம் அருகே அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலம் கரையொதுங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், காணாமல்போயுள்ள மற்றைய மீனவரை தேடும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

## மீன், கருவாடு, நெத்தலி, மாசி ஆகியவற்றுக்கு வரி அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 31

இறக்குமதி செய்யப்படும் மீன், கருவாடு, மாசி மற்றும் நெத்தலி போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கான விசேட வியாபாரப்பண்ட வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் மீன் விற்பனை குறைந்துள்ள சூழலில், அவற்றைக் கருவாடாக்கும் நடவடிக்கைகளை, உள்ளூர் உற்பத்தியாளர்கள் மேற்கொண்டுவருகின்ற நிலையிலேயே, மேற்படி அத்தியாவசியப் பொருள்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் கருவாட்டுக்கு 127 ரூபாயும், மாசி ஒரு கிலோகிராமுக்கு 302 ரூபாயும், நெத்திலி ஒரு கிலோ கிராமுக்கு ஒரு ரூபாய் என்ற அடிப்படையில், விசேட வியாபாரப் பண்டவரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

## மருந்துகளை விநியோகம் செய்யும்போது மருந்தக அனுமதியைப் பயன்படுத்தலாம்!

ஊரடங்கு காலப்பகுதியில் மருந்துகளை விநியோகிக்கும்போது, மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தை ஊரடங்கு அனுமதியாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் விசேட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்படும் காலப்பகுதியில், தடையின்றி பொதுமக்களுக்கு மருந்துகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறு வீடுகளுக்கு மருந்துகளை விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்போது, தனிமைப்படுத்தல் சுகாதார விதிமுறைகள் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின்வழிகாட்டல்கள்ஆகியவற்றுக்குஅமைய மருந்தக உரிமையாளர்கள் செயற்பட வேண்டும்எனவும்வலியுறுத்தப்பட்டுள்ளது.

## பாடசாலைகளை மீளவும் ஆரம்பிப்பதற்காக சுகாதாரப் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன!

கொழும்பு, ஒக். 31

எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகப் பரிசீலனை மேற்கொள்வதற்காக சுகாதார பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான சுகாதார அணுகுமுறைகள் குறித்த எழுத்து மூல பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையில் இணையவழிக் கற்பித்தல் தொடர்பான மேற்பார்வை ஒன்றைச் செய்தவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அனைத்து மாணவர்களுக்கும் இணைய வசதி இன்மை காரணமாக இந்த மேற்பார்வையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## வளி மாசு மட்டத்தின் அளவு அதிகரிப்பு!

நாட்டில் வளி மாசு மட்டத்தின் அளவு அசாதாரணமான முறையில் அதிகரித்துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி, புத்தளம், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கடந்த 27 ஆம் திகதி முதல் இவ்வாறு அசாதாரணமான முறையில் வளி மாசு அதிகரித்து வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்திய துணைக் கண்டத்தின் மேல் வானத்தின் வளி மாசு எமது நாட்டின் வளிமண்டலத்திற்குள்நுழைவதாலேயே இவ்வாறு வளி மாசு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவின் 2 ஆவது அலை மிகவேகமாகப் பரவி வருகின்றது!



## இராணுவத் தளபதி கூறுகிறார்

கொரோனா தொற்றின் இரண்டாம் அலை மிக வேகமாக பரவிவருவதாக இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் -

மேல்மாகாணத்திலேயே அதிக கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். அதிலும் இம்முறை மிகவும் வேகமாக தொற்று பரவிவருகின்றது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக விசேட பரிசோதனைகளை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைகழகத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கந்தகாடு, பேலியகொட, மினுவாங்கொடை ஆகிய பகுதிகளில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் மாதிரிகளைக் கொண்டு இந்தப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த ஆய்வு அறிக்கையும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மேலும், மேல்மாகாணத்தில் அதிக கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றமையைத் தொடர்ந்து மேல்மாகாணத்துக்கு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 5 மணிவரை ஊரடங்கு அமுலில் இருக்கும். திங்கள் காலை கண்டிப்பாக ஊரடங்கு தளர்த்தப்படும். ஆனால் தற்போது ஊரடங்கு அமுலில் உள்ள பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட மாட்டா. - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கரவெட்டியில் கொரோனாத் தொற்றால் 750 வழித்தடச் சேவைகள் இடைநிறுத்தம்

பருத்தித்துறை, ஒக்.31

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 750 வழித்தடச் சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பஸ்களும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலில் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

கரவெட்டி பிரதேசத்திலுள்ள இராஜ கிராமத்தைச் சேர்ந்த பலர் தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்களாகப் பணியாற்றும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இராஜகிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கடந்த புதன்கிழமை கண்டறியப்பட்டது.

பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று வந்த நிலையில் அவர் கிராமத்தில் நடமாடியுள்ளார். இந்தநிலையில், இராஜ கிராமத்தில் 60 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

தொற்றாளருடன் நேரடித் தொடர்பிலிருந்த யாராவது தனியார் பஸ் சேவையில் கடமையாற்றினால் பயணிகளுக்குத் தொற்று ஏற்படலாம். அதனால் தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையோரைக் கண்டறியும் வகையில் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 750 வழித்தடச் சேவையில் ஈடுபடும் அனைத்துத் தனியார் பஸ்களும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

# மத்திய கலாசார நிதி அபிவிருத்திக்கு 340 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டது!

மத்திய கலாசார நிதியத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் 340 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மத்திய கலாசார நிதியத்தின் சபை அமர்வு, கடந்த வியாழக்கிழமை மத்திய கலாசார நிதியத்தின் தலைவரும், பிரதமர் மற்றும் புத்தசாசன, சமய, கலாசார அலுவல்கள் அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது, மத்திய கலாசார நிதியத்தின் கீழ் காணப்படும் நிறுவன கட்டுமானங்கள் நேரடி ஒப்பந்த அடிப்படையில் அரச கட்டுமான நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்குப் பிரதமர் அறிவுறுத்தினார்.

தம்பானே பழங்குடியினருக்குச் சொந்தமான, ஐக்கிய இராச்சியத்தின் எடின்பேர்க் பல்கலைக் கழகக் கலைக்கூடத்தில் வைக்கப்பட்டிருந்த பழங்குடியின மக்களது மண்டை ஓடுகள் மீண்டும் பழங்குடி மக்கள் தலைவர் ஊறுவரிகே வன்னில அத்தன் என்பவருக்கு வழங்கும் நடவடிக்கை எடின்பேர்க் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது இடம்பெற்றது.

அதற்கமைய, தொல்பொருள் மதிப்புவாய்ந்த, பழங்குடி மக்களுக்குச் சொந்தமானவை எனக் கூறப்படும் இந்த எலும்புக்கூடுகளை வைப்பதற்கு கலைக்கூடமொன்றை நிறுவுவதற்கு மத்திய கலாசார நிதியத்தின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் இதன்போது பிரதமர் அறிவுறுத்தினார்.

2021ஆம் ஆண்டுக்கான மத்திய கலாசார நிதியத்தின் அபிவிருத்தித் திட்டத்துக்கான 340 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த சபை அமர்வில், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமரின் மேலதிக செயலாளர் (சட்டம்) கணேஷ் தர்மவர்தன, சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டி ஆராச்சி, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மீண்டும் அடுத்த வாரம் முதல்

# யாழ். மருத்துவ பீடத்தில் பி.சி.ஆர். பரிசோதனை!

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் அடுத்த வாரம் முதல் மீண்டும் கொரோனாத் தொற்றுத் தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனைகளை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் மாத்திரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதனால் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. இதனைத் தவிர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொண்டு, முடிவுகளை விரைந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ். கேதீஸ்வரன், உதவிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ். குமாரவேல், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி, யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவ நிபுணர் எஸ். ரவிராஜ், சமுதாய மருத்துவத் துறைத் தலைவரும், பல்கலைக் கழக கொவிட் 19 செயலணியின் இணைப்பாளருமான மருத்துவர் எஸ். சுரேந்திரகுமாரன் மற்றும் நுண்ணுயிரியல், நோயியல் துறை விரிவுரையாளர்களும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனைகளை அடுத்த வாரம் முதல் ஆரம்பிப்பதற்கு அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனைகளுக்குத் தேவையான மாதிரிகளை மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்வது எனவும், ஆய்வு நட வடிக்கைகளுக்கான நுண்ணுயிரியல் சிறப்பு ஆலோசனைகளையும், தேவையான உயிரியல் காப்பு முறைகளைக் கண்காணித்து, உரியஅறிவுறுத்தல்களையும் யாழ். போதனா வைத்தியசாலையின் ஒட்டுண்ணியியல் நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி ரஜந்தி இராமச்சந்திரன் வழங்குவார் என்றும், உயிரியல் மற்றும் ஆய்வு கூடக் கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்றும் பணியை யாழ். போதனா வைத்தியசாலை மேற்கொள்ளும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மருத்துவ பீடத்தின் வழக்கமான பணிகளுக்குப் பாதிப்பேதும் ஏற்படாத வகையில் சர்வதேச நுண்ணுயிரியல் ஆய்வுத் தர நியமங்களுக்கமைய பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. மருத்துவ பீடத்தில் இருந்து கடந்த முறை இந்தப் பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர்களான அ. முருகானந்தன், மு. கலாமதி மற்றும் பேராசிரியர் செ. கண்ணதாசன் ஆகியோர் மட்டுமே இந்தப் பரிசோதனைகளில் ஈடுபடவுள்ளனர். இவர்களுடன் பணியாற்றுவதற்கென நுண்ணுயிரியல் ஆய்வு கூடவியலாளர்களைப் பணிக்கு அமர்த்துவதற்கு யாழ். பல்கலைக்கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் தற்போதுள்ள பி.சி. ஆர். பரிசோதனை இயந்திரத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 60 மாதிரிகளே சோதனை செய்யப்பட முடியும். இதனை 180 ஆக அதிகரிப்பதற்காக, ரூபா 50 லட்சம் பெறுமதியான புதிய பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரம் ஒன்றை வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனத் துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குண ராஜா இந்தக் கூட்டத்தில் உறுதியளித்துள்ளார். மருத்துவ பீடத்தினால் மேற் கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தினமும் மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மட்டக்களப்பு படுவான்கரையிலும் கொரோனா மக்களுக்கு சுகாதார பணிப்பாளர் எச்சரிக்கை!

மட்டக்களப்பு பட்டிப்பளை, மாவடிமுன்மாரியில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

மாவடிமுன்மாரியில் கொழும்பில் இருந்து தடிமன் காய்ச்சலுடன் மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு வந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று கடந்த வியாழக்கிழமை இரவு கண்டறியப்பட்டுள்ளது.

ஓட்டமாவடியில் ஒருவர் உட்பட இருவர் கண்டறியப்பட்டமையையடுத்து மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளது.

எனவே, கொழும்பில் இருந்து வருபவர்கள் தொடர்பாக சுகாதாரத் திணைக்களத்துக்கு பொதுமக்கள் அறியத்தர வேண்டும்

பேலிய கொடை மீன் சந்தையுடன் தொடர்புபட்டவர்கள் ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 31 பேர் இதுவரைக்கும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கு மாறாக கொழும்பு - பம்பலப்பிட்டியில் பணிபுரிந்துவிட்டு வீடு திரும்பிய பெரியபோரதீவு பட்டாபுரத்தைச் சேர்ந்த ஒருவர், காய்ச்சல் காரணமாக சிகிச்சைக்காக வைத்திய சாலைக்குச் சென்றபோது கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்த நபர் கொரோனோ தொற்றுடன் பொது பஸ்ஸில் பிரயாணம் செய்து வீட்டை வந்தடைந்துள்ளார். இவருடன் பிரயாணம் செய்தவர்களையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே நேற்றுமுன்தினம் வாழைச்சேனை மற்றும் மாவடிவேம்புமுன்மாரியில் ஒருவர் உட்பட இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் கூடியளவு சுகாதார வழிமுறைகளை பின்பற்றி அவதானமாக செயற்பட வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# குற்றவியல் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் 14 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி!

கொழும்பு குற்றவியல் பிரிவைச் சேர்ந்த 14 அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு குற்றவியல் பிரிவின் உயர் அதிகாரியொருவர், சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு: –

அந்தப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரியொருவருக்கு, முன்னதாக கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவருடன் தொடர்புகளைப் பேணிய, ஏனைய 20 அதிகாரிகளுக்கு பி.சி.ஆர். சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தப் பி.சி.ஆர்.சோதனை முடிவுகளில் 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா வைரஸின் தாக்கமும்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

04) கட்டுக்கடங்கா நினைவு நடத்தை (Obses-sive–Compulsive Disorder (OCD)

கட்டுக்கடங்கா நினைவு நடத்தை என்பது ஓர் வகையான கட்டுப்படுத்த முடியாத , தீவிர செயல் வடிவம் பெறும் எண்ண அல்லது சிந்தனை ஆக்கிரமிப்பு நடத்தையாகும். இதனால் சிலர் சில விடயங்களை அல்லது செயல்களை திரும்பத் திரும்ப செய்து கொண்டே இருப்பார்கள். உதாரணமாக அடிக்கடி கை கழுவுதல், அடிக்கடி குளித்தல், அடிக்கடி துணிதோய்த்தல்,அடிக்கடி சுத்தம் செய்தல் போன்றவற்றைக்குறிப்பிடலாம். இதற்கு காரணம் சிலருக்கு கிருமி தொற்று பற்றிய அதீத பயமும் அது தொடர்பான தீவிர எண்ணங்களுமே ஆகும். ஆனாலும் ஒரு சிலருக்கு இது அதிகமாகக் காணப்படும்.

உதாரணமாக இதனால் தீவரமாக பாதிக் கட்டவர்கள் சமைக்கும் அடுப்பிற்கு பாவிக்கும் விறகுகளைக் கூடக் கழுவி, வெயிலில் உலர வைத்து சமையலுக்கு பயன்படுத்துவார்கள். சீனி என்பவற்றைக் கழுவிய பிறகே தேநீருக்கு பயன்படுத்தவார்கள். இன்னும் சிலர் எதைத் தொட்டாலும் அடிக்கடி கை கழுவுவார்கள். ஒரு சிலர் தமக்கென்றே சாப்பாட்டு தட்டுக்களையும், தேநீர் குவளைகளையும் போகும் இடமெல்லாம் எடுத்துச் சென்று பயன்படுத்துவார்கள். எந்த சூழ்நிலையிலும் மற்றவர்களின் பொருள்களைப் பயன்படுத்த மாட்டார்கள். அதனால் இவர்கள் சமூகத்தில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதுடன், குடும்ப வாழ்க்கையில் ஓர் திருப்தியற்ற வாழ்க்கையினையே வாழ்ந்து கொண்டு இருப்பார்கள். இவ்வாறாக கட்டுக்கடங்கா நினைவு நடத்தையால் (OCD) பாதிக்கப்பட்டவர்களுக்கு இக் கொரோனாத் தொற்றின் பாதிப்பானது கட்டுக்கடங்கா நினைவு நடத்தைகளை (தீவிரமான சுத்தம் பார்த்தல்) மேலும் ஊக்குவிப்பதாக அமைவதுடன், ஒரு நிம்மதியற்ற பதற்றமான நடத்தைக் கோலங்களை ஏற்படுத்திவிடும்.

இதுமட்டுமன்றி, ஓரளவு சுத்தம் பேணுபவர்களை அல்லது கட்டுக்கடங்கா நினைவு நடத்தை பாதிப்பினால் ஆரம்ப நிலையில் உள்ளவர்களை கூட இக் கொரோனாத் தொற்றின் தாக்கமானது எதிர்காலத்தில் கட்டுக்கடங்கா நினைவு நடத்தைக்கு (OCD) ஆளாக்கிவிடும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதனால் எதைத் தொட்டாலும். பார்த்தாலும் கொரோனாக் கிருமி அல்லது வைரஸ் இருக்குமோ என்ற எண்ண ஓட்டமம், பயமும், பதற் றமும் காணப்படும். அவர்களுக்கு எந்தப் பொரு ளைத் தொட்டாலும், யாருடன் பழகினாலும் சுத்தம் செய்ய வேண்டும் என்ற மனநிலை அல்லது எண்ணம் காணப்படும். அவ்வாறு செய்யாவிடின் உடல் ரீதியாகத் தான் பாதிக்கப்படுவதாகவும் ஓர் மனப் பிரம்மை அல்லது கற்பனை செய்வதுடன், சிலர் அவ்வாறே பாதிப்புக்களை எதிர்கொள்வார்கள். உதாரணமாக சுடவைத்து வடிகட்டிய தண்ணீர் அல்லாத சாதாரண தண்ணி குடித்தால் இருமல், காய்ச்சல் உடல், உபாதைகள் ஏற்படும் என்ற எண்ணம் ஆட்டுவிக்கும். ஆனால் சிலருக்கோ உடல் உபாதைகள் அவர்கள் நினைப்பது போல் ஏற்படும். இதனால் அதிகளவான பாதிப்பினை கட்டுக்கடங்கா நினைவு நடத்தை (OCD) உள்ளவர்களையும் மன ரீதியாகவும், நடத்தை கொரோனா பற்றிய பயம் அதிகம் பாதிக்கும்.

### மனவெழுச்சிப்பிரச்சினைகள் (Emotional Problem)

### கோபம் (Anger)

கொரோனாத் தொற்றின் பாதிப்புக்குள்ளானவர்கள் அதிகளவு கோப உணர்வுடன் காணப்படுவதுடன் அக்கோபமானது தன்னை பற்றியும் தன் அலட்சியப் போக்கால் இந்தக் கொரோனா வந்ததென்ற எண்ணமும், சமூகத்தில் உள்ள கோபமும் இவர்களிடத்தே மாறி மாறி காணப்படும். இதனால் தன்னையும் சமூகத்தையம் ஒரு கோப மனப்பான்மையுடன் பார்க்கும் தன்மை காணப்படும். கொரோனாத் தொற்றுப் பற்றிய எண்ணம் உள்ள ஒருவருக்கு யாரேனும் ஒருவர் சுத்தம் பேணாது காணப்பட்டாலோ,கூட்டத்தில் இருமினாலோ,எச்சில் துப்பினாலோ அதிகளவு கோபம் வர வாய்ப்புள்ளது. சமூகப் பொறுப்பணர்வினால் இக்கோபம் வந்தாலும் தானும் பாதிக்கபட்டுவிடுவேன் என்ற மனப்பாங்கும் கோபத்திற்கு ஓர் காரணமாகும். இது கொரோனா பற்றிய பாதிப்பின் அனுபங்களினது ஆழ்மனப் பதிவுகளின் மனவெழுச்சியுடன் கூடிய மனப்பாங்கு மாற்றமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

### பயம் (Fear)

கொரோனா பாதித்த ஒருவர் அதிகளவு பயத்துடன் காணப்படுவர். இந்த நோயால் தான் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற பயமும், அவ்வாறு தப்பித்துக் கொண்டாலும் எதிர் காலத்தில் தன்னை மீண்டும் அது பாதிக்குமோ என்ற வகையிலும் சிந்திப்பதுடன், எப்போது வேண்டுமானாலும் இறந்துவிடுவேனோ என்ற பயத்துடன் கூடிய ஓர் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பர். மேலும் கொரோனா பற்றி பயமானது மக்கள் மத்தியில் அதிகமாக காணப்படுவதால் எங்கு சென்றாலும், இந்த நோய் தொற்றிவிடுமோ என்ற பய உணர்வுகளுடன் இவர்கள் காணப்படுவதால் அதிகளவு வெளியில் செல்வதைக் குறைத்து பயத்தினால் வீட்டினுள் முடங்கிவிடுவார்கள்.

### சிறுவர்களது மனநிலை பாதிப்புக்கள்

சிறுவர்கள் மத்தியில் கொரோனா வைரஸ் பற்றி நோக்கும் போது இதனை சிலர் பேய்,பூதம் என்றவாறாக கற்பனை பண்ணி பீதியடைவர். சிலர் பெற்றோரின் பக்குவமான கொரோனா வைரஸ் பற்றிய விளக்கத்தினால் ஓரளவு பயமற்று காணப்படுவதுடன் பெற்றோர் கடைப்பிடிக்க சொல்லும் வழிவகைகளை பின்பற்றுவார்கள். ஆனாலும் பெற்றோரும் சமூகத்தவரும் இது தொடர்பான அதிகளவு பயத்தினை அவர்களுக்கு உண்டு பண்ணினால் அவர்களுக்குப் பயம் ஏற்பட்டு நித்திரைக் குழப்பம்,கெட்ட கனவு காணுதல்,படுக்கையில் சிறுநீர் கழித்தல்,நித்திரையில் பயந்து கத்துதல்,பெற்றோரின் கையை இறுகப் பிடித்தல், தனியாக இருக்க,தூங்கப் பயம் போன்ற பாதிப்புக்கள் ஏற்பட வாய்புண்டு. இதனால் அவர்களது ஆளுமை வளர்ச்சி எதிர்காலத்தில் பாதிக்கப்படும். இதனால் பெற்றோரும்,சமூகத்தவரும் பொறுப்புடன் சிறுவர்களைக் கையாள வேண்டும்.

எனவே ஓர் நோய் பற்றிய அதிக பயமே அந்நோய் வரக் காரணமாக அமைந்து விடுகிறது என்பது சில ஆராய்சிகளின் முடிவாகும். இது அந்நோய் பற்றிய தீவிர சிந்தனையால் ஏற்படுவது உண்டு.

ஒரு வகையில் கொரோனா அதிகளவு நோய் எதிர்ப்பு சக்தி உள்ளவர்களைத் தாக்குவதில்லை என குறிப்பிடுகின்றனர், இதனால் எமது மனநிலைகளிலும் (Attitude) வாழ்கை முறைகளிலும் (Life styles) மாற்றங்களை கொண்டு வர வேண்டியது அவசியமாகும்.

இந்த வகையில் எமது நேர்முகமான உளத்திறனை அதிகரிப்பதுடன் நேர்முகமான சிந்தனைப் போக்கினையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எம்மை பற்றிய ஒரு நம்பிக்கையை நாங்களே உருவாக்கிக்கொள்ள வேண்டும். அத்துடன் உடலுக்கு சக்தி தரக்கூடிய பாரம்பரிய உணவுகளை உட்கொள்ளுவதுடன், எமது சுகாதாரத்திலும் நாம் அக்கறை காட்ட வேண்டும். மேலும், இயற்கையோடு ஒட்டிவாழும் வாழ்க்கை முறைக்கு எம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.உண்மையில் இவ்வாறான பிரச்சினைக்கு காரணம் மனிதன் இயற்கையாக நியதிகளை, விதிகளை மாற்றியமைக்கமுற்பட்டதேயாகும்.இந்தவகையில்,இயற்கை விதிகளையும்,நியதிகளையும் மனிதன் மாற்றி அமைத்தால் இவ்வாறானதொரு நிலைதான் ஏற்படும் என்பதனை இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து இருந்து மனிதன் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

**அனுசரணை: சாந்திகம் உளவளத்துணை நிலையம் - SCORE திட்டம்**

## தான் தப்புவதற்காக அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கையில் எடுத்துள்ளார்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பான மனுவில் கையெழுத்திடக் கோரியபோது, இப்போது வேண்டாம் என்று சுமந்திரன் தெரிவித்தார் என்று மனோ கணேசன் தெரிவித்துள் ளமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஓரிரு தினங்களுக்கு முன்னர், துமிந்த சில்வாவின் விடுதலை தொடர்பில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்ட மனுவில் தானும் கைச்சாத்திட்டார் எனவும், மூன்று வாரங்களின் முன்னரே இந்தச் சம்பவம் நடைபெற்றது எனவும், ஆனால், அது தற்போது நான் எதிர்பாராத விதமாக வெளிவந்துவிட்டது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தொலைபேசியில் என்னிடம் தெரிவித்தார்.

மனோ கணேசன் தனது தவறை மூடி மறைப்பதற்கு, அர சியல் கைதிகளின் விடுதலையை, துமிந்த சில்வாவின் விடு தலையுடன் ஒப்பிட்டது தவறான ஒரு செயலாகும். அதனால், சில சங்கடங்களும், சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன என்று மனோ கணேசன் என்னிடம் தெரிவித்தார். அதைச் சமாளிப்பதற்கு, தமிழ் அரசியல் கட்சிகளின் விடுதலை தொடர்பான ஒரு மனுவை நாங்கள் சேர்த்துக் கொடுத்தால் என்ன என என்னிடம் அவர் கேட்டார்.

அத்துடன் துமிந்த சில்வாவின் விடுதலை மனுவில் கைச் சாத்திட்டத்திற்கான உண்மையான காரணத்தையும் அவர் என்னிடம் தெரிவித்திருந்தார். தனிப்பட்ட உரையாடலின்போது, அவர் அந்தக் காரணத்தை என்னிடம் சொன்னதனால், அதைப் பகிரங்கமாகச் சொல்ல விரும்பவில்லை. அரசியல் நாகரிகத்தை அவர் பேணாவிட்டாலும், அந்த நாகரிகத்தைப் பேண நான் விரும்புகின்றேன்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் அவர் சொன்னது, துமிந்த சில்வாவின் மனுவில் கையொப்பமிட்டதில் இருந்து தப்புவதற்கு, தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான மனுவை முன்வைத்தால் என்ன என்று கேட்டார்.

அதற்கு நான் மறுத்துவிட்டேன். மறுப்புத் தெரிவித்தமைக் கான காரணத்தையும் நான் சொல்லியிருந்தேன். அவர் சொல் வதைப் போன்று, இந்த நேரத்தில் அது தேவையில்லை என நான் சொல்லவில்லை. அது தவறானது என்றே தெரிவித்திருந்தேன்.

தமிழ் அரசியல்வாதிகள் விடுதலை செய்யப்படுவது சரியான விடயம். அது செய்யப்பட வேண்டிய விடயம்தான். ஆனால், துமிந்த சில்வாவை விடுதலை செய்வது தவறான விடயம்.

ஆகையினால், செய்யப்படக்கூடாத விடயத்தையும், கட்டாயம் செய்யப்பட வேண்டிய விடயத்தையும், ஒன்றாகக் காட்டுவது, மிக மிகத் தவறான செயற்பாடு. சுனில் ரத்னாயக்காவுக்கு மன் னிப்புக் கொடுக்கப்பட்டபோது கூட, தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யலாம்தானே என்றதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்திருந்தேன்.

இந்த இரண்டு விடயங்களையும் சேர்க்ககூடாது. சுனில் ரத்னாயக்க விடுவிக்கப்பட்டது தவறான செயல். துவறான செயலை வைத்து, சரியான செயலை செய்வதற்கு, தவறான செயலை யும், சரியானதென சொல்வதாக ஆகிவிடும்.

எனவே, சுனில் ரத்னாயக்காவின் விடுதலை தொடர்பாக, நாங்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றோம். தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தை, இந்தத் தவறான செயலுடன் சேர்க்கக் கூடாது. அவர்கள் கட்டாயமாக விடுவிக்கப் பட வேண்டியவர்கள். அது வேறு விடயம்.

மனோ கணேசன், ஞானசார தேரர் சிறையில் இருந்தபோது, அவரைச் சிறையில் சென்று பார்வையிட்டு, அதன்பின்னர், அவர் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தவர்.

பிள்ளையானைச் சிறையில் சந்தித்தவர். ஞானசார தேரர், பிள்ளையான், சுனில் ரத்னாயக்க, துமிந்த சில்வா ஆகியோர் விடுவிக்கப்பட வேண்டும் என நாங்கள் கேட்கவில்லை. அவர்கள் விடுவிக்கப்பட வேண்டியவர்கள் அல்லர்.

தமிழ் அரசியல் கைதிகள் என நாங்கள் அடையாளப்படுத்துபவர்கள், கட்டாயமாக விடுவிக்கப்பட வேண்டியவர்கள். ஆகவே, தவறான ஒரு விடயத்தையும், சரியான ஒரு விடயத்தையும், முடிச்சுப் போட வேண்டாம் என நான் அவரிடம் சொல்லியிருந்தேன்.

அவ்வாறான ஒரு செயற்பாட்டுக்கு இணங்க முடியாதென்று நான் அவருக்குத் தெளிவாகச் சொல்லியிருந்தேன். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது எங்களின் கோரிக்கை. தவறான செயலை செய்ததில் இருந்து தான் தப்புவிக்க வேண்டும் என்று, அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்த நினைப்பது ஒரு தவறான செயற்பாடு. அதற்கு இணங்கிப் போகக்கூடாது என்பது என்னுடைய நிலைப்பாடு.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் யோசித்துவிட்டுச் சொல்வதாக, தன்னிடம் கூறினார் என மனோ கணேசன் ஊடகங்களில் தெரிவித்திருந்தார்.

ஆனால், அடைக்கலநாதன், தான் அவ்வாறு சொல்ல வில்லை. இரண்டு விடயங்களையும் சம்பந்தப்படுத்த வேண்டாம் எனத் தெளிவாகச் சொன்னார் என, ஊடகங்களிடம் தெரிவிக்குமாறு என்னிடம் இன்று (நேற்று) காலை தெரிவித்தார்.

மனோ கணேசன், துரதிஷ்டவசமாக, தான் அகப்பட்ட அரசியல் சிக்கலில் இருந்து விடுபடுவதற்காக, இவ்வாறு பேசுவது பிழையான ஒரு விடயம். அவர் என்னிடம் தனிப்பட்ட விடயமாகப் பேசியதால், சில விடயங்களை வெளிப்படுத்தவில்லை. நாங்கள் தெரிவித்ததாக மனோ கணேசன் ஊடகங்களுக் குத் தெரிவித்திருந்தமையினால், நானும், அடைக்கலநாதனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக, தெளிவான நிலைப் பாட்டை சொல்லியிருக்கின்றோம். அந்தத் தேவை எமக்கு ஏற்பட்டிருக்கின்றது – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அதிக பொருள்களைக் கொள்வனவு செய்வதை மக்கள் தவிர்க்கவேண்டும்

## வர்த்தக அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஒக். 31

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மக்கள் தேவைக்கு அதிகமாகப் பொருள்களைக் கொள்வனவு செய்வதை முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குண வர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட்–19வைரஸ்தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும், அரச சேவையை சீராக முன்னெடுக்கவும் அரசாங்கம் பலநடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஒரு சில பிரதேசங்களில் மக்கள் பொறுப்பற்ற விதமாகச் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

ஊரடங்குச் சட்டம் முழு நாட்டுக்கும் மாதக் கணக்கில் அமுல்படுத்தப்படும் என தவறான வதந்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பொது மக்கள் தேவைக்கு அதிகமாகப் பொருள்களைக் கொள்வனவு செய்கிறார்கள். இவ்வாறான செயற்பாடுகளை முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வசதி படைத்தோர் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது சாதாரண மக்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

அத்தியாவசியப் பொருள்களைத் தேவைக்கு மேலதிகமாகக் கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் ஏதும் கிடையாது. அத்தியாவசியப் பொருள்கள் தேவையான அளவு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. – என்றார்.

# ஆரையம்பதி ஆடைத்தொழிற்சாலை தற்காலிகமாக 3 நாள்கள் பூட்டு!

மட்டக்களப்பு – ஆரையம்பதியில் அமைந்துள்ள பிரெண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலையைத் தற்காலிகமாக மூன்று நாள்களுக்கு மூடுமாறு கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி மற்றும் மாவடி முன்மாரியில் கண்டறியப்பட்ட இரு கொரோனோ தொற்றாளர்களின் நெருங்கிய உறவினர்கள் ஆரையம்பதியில் அமைந்துள்ள பிரெண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வருகின்றமையையடுத்து அந்த ஆடைத்தொழிற்சாலையைத் தற்காலிகமாக நேற்று முதல் 3 நாள்களுக்கு மூடி கிருமிநாசினி விசிறி சுத்தப்படுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

அந்த ஆடைத் தொழிற்சாலையில் சுமார் 3 ஆயிரம் பேர் தொழில் புரிந்துவருகின்றனர். இந்த நிலையில் தற்போது மினுவாங்கொடையில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனா தொற்றுதலையடுத்து இந்த ஆடைத்தொழிற்சாலையில் தற்போது ஊழியர்கள் குறைக்கப்பட்டு இங்குள்ள பணியாளர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொண்டு ஆடைத் தொழிற்சாலை இயங்கிவருகின்றது.

இருந்தபோதும் தற்போது களுவாஞ்சிக்குடி மாவடி முன்மாரியில் கண்டறியப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் இருவரது சகோதரிகள், உறவினர்கள் அந்த ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வருகின்றனர்.

இதன் காரணமாக அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப் பட் டுள்ளமையுடன் ஆடைத் தொழிற்சாலையை தற்காலிகமாக நேற்றில் இருந்து மூடி சுகாதார நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பொது சுகாதார அதிகாரிகள் ஆடைத்தொழிற்சாலை நிர்வாகததுக்கு அறிவுரை வழங்கியமையையடுத்து உடனடியாக ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது.

இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் அறிக்கைகள் வந்த பின்னர் இது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கமுடியும். – என அவர் தெரிவித்தார்.

### கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தால்

# முல்லை சாலை களப்பு பகுதியின் மூன்று விவசாயிகள் மீது வழக்கு

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம் சாலை களப்பு பகுதியில் கண்டல் தாவரங்கள், இயற்கை வளங்களை அழித்து விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்து மூவருக்கு எதிராக மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

சாலையின் களப்பு பகுதில் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளில் 15ற்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு கண்டல் தாவரப் பகுதிகளை அழித்து குழிகளை ஏற்படுத்துகின்றமையோடு அப்பகுதிகளில் தடுப்பு அணைகளையும் அனுமதி இன்றி ஏற்படுத்தி உள்ளனர். பல ஏக்கர் நிலத்தையும் ஆக்கிரமித்துள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு கடற்கரையை ஆக்கிரமித்த 15 இற்கும் மேற்பட்டோரில் இனம் காணப்பட்ட மூவரிற்கு எதிராக மாவட்ட நீரியல் வளத் திணைக்களம் வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதோடு அதற்கு ஆதாரமாக அப்பகுதியில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் பட ஆதாரங்களாகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கை எதிர் வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த மன்று 3 எதிராளிகளிற்கும் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

# காலி கொக்கலை ஆடைத் தொழிற்சாலை ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று!

## அங்கு 1,500 ஊழியர்கள் பணிபுரிகின்றார்கள்

காலி, கொக்கலை பகுதியில் அமைந்துள்ள பிராண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஊழியர் மீது நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவிலேயே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக காலி மாவட்ட பிராந்திய தொற்று நோயியல் நிபுணர் வேனுரா கே. சிங்கராச்சி குறிப்பிட்டுள்ளார்.

அந்தத் தொழிற்சாலையின் இரு பெண் ஊழியர்கள் சளி மற்றும் இருமலால் பாதிக்கப்பட்டு, காலி மஹமோதர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

இதன்போதே அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களின் பி.சி.ஆர். சோதனைகளில் ஒருவர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவந்தது.

இந்த நிலையில் தற்போது அந்தக் கொரோனா நோயாளி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன், கொரோனா தொற்று அறிகுறிகளை வெளிப்படுத்திய மற்றைய நபரை அவரது வீட்டில் சுய தனிமைப் படுத்தலுக்குட்படுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

ரத்கமவில் வசிக்கும் இரண்டு ஊழியர்கள் நிறுவனம் வழங்கிய தனியார் பஸ்ஸில் வேலைக்குச் சென்றனர் எனவும் கூறப்படுகிறது. தொழிற்சாலையின் கிட்டத்தட்ட 75 – 100 ஊழியர்கள் இவர்களுடன் போக்குவரத்தில் ஈடுபட்டனர் எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் பதிக்கப்பட்ட நோயாளர்களுடன் தொடர்புகளைப் பேணிய ஏனைய ஊழியர்கள் மீது பி.சி.ஆர். சோதனை நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்ட ஊழியர்களது முடிவுகள் வெளியாகும் வரை அவர்களது வீடுகளில் அவர்கள் தனிமைப்படுத்தலில் இருக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கொக்கலை பிராண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் சுமார் 1500 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர் எனவும் காலி மாவட்ட பிராந்திய தொற்று நோயியல் நிபுணர் சுட்டிக்காட்டினார்.

# 82 கிலோ கஞ்சாவுடன் காரைநகரில் படகு மீட்பு



யாழ். காரைநகரில் கடல் மார்க்கமாகக் கடத்தி வரப்பட்ட 82 கிலோகிராம் கேரளாக் கஞ்சாவையும் படகு ஒன்றையும் மீட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்றிரவு காரைநகரில் உள்ள கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில், சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த படகு ஒன்றைத் துரத்திச் சென்ற போது, படகில் சென்றவர்கள் வேகமாகப் படகைச் செலுத்திச் சென்று காரைநகர் கசூரினா கடற்கரையில் படகை நிறுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அப்படகில் கடற்படையினர் சோதனையிட்டபோது, 82 கிலோ கிராம் கஞ்சா இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

படகும், மீட்கப்பட்ட கஞ்சாவும் காரைநகர் கடற்படைத் தளத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.10.2020 இல் வெளியிடப்பெற்றது.

# நீதியை சர்வதேசம் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையோடு போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றோம்!

## காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவிப்பு

எங்களுக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையோடு நாங்கள் இந்த போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றோம் என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளது சங்கத் தலைவி கோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளைத் தேடும் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் அவர் தெரிவிக்கையில் –

எங்களுக்கான நீதி எப்போது கிடைக்கும், அதனை யார் பெற்று தருவார்கள் என்ற ஏக்கத்தில் நாங்கள் வீதிகளில் காத்திருக்கின்றோம்.

எமது இந்தப் போராட்டம் தீர்வு கிடைக்கும்வரை தொடரும் என உலக நாடுகள் மாத்திரமல்ல சர்வதேசத்தில் வாழும் உறவுகளுக்கும் தெரியும்.

சர்வதேச நாடுகளில் வாழ்கின்றவர்கள் எங்களுக்காகக் குரல்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடும், எங்களுக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையோடும் நாங்கள் இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றோம்.

சென்ற ஒரு சில நாள்களுக்கு முன் அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொண்டிருந்த போதும் கொரோனா என்ற கொடிய நோயின் காரணமாக அவரைச் சந்திக்க முடியாமல் போயுள்ளது.

இந்த நிலையில் எமது நீதிக்கான கோரிக்கையை அவரிடம் கையளித்துள்ளோம். எமக்கான நீதியைப் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.



கிளிநொச்சியில் மாத்திரமல்ல, பல பகுதிகளிலும் இந்தப் போராட்டம் நடைபெற்று வருகின்றது. இந்த கொடிய நோயின் காரணமாக எமது உறவுகள் போராட்டத்துக்கு வருகைதர முடியாது இருக்கின்றார்கள்.

இந்த நிலையில் வருகை தந்த சொற்ப உறவுகளை வைத்துக் கொண்டு எமது போராட்டத்தை முன்னெடுத்து செல்கின்றோம். காணாமல் போனோரின் கடைசித் தாய் இருக்கும்வரை இந்தப் போராட்டம் தொடரும்.

இந்த கொரோனா மாத்திரமல்ல இராணுவம், இராணுவ புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் கூட எங்களது உறவுகளைத் தேடுவதை நாம் கைவிடப்போவதில்லை.

இந்த ஆட்சி மாற்றத்தின் பின்னர் நிறையவே அச்சுறுத்தல்கள், விசாரணைகள், விசாரிப்பது போன்றதான போர்வைக்கு மத்தியில் இந்தப் போராட்டத்தை நாங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றோம்.

இந்த இராணுவ அச்சுறுத்தல்களுக்கோ, பயமுறுத்தலுக்கோ நாங்கள் ஒருபோதும் தலைகுனியப் போவதில்லை. எமக்கு நீதி வேண்டும்.

கையளித்து காணாமலாக்கப்பட்டவர்கள் எங்கே என்று இலங்கை அரசிடம் கேட்டு நின்ற போதிலும் 12 வருடங்கள் தாண்டியும் பதில் சொல்லவில்லை. அவர்கள் ஒருபோதும் எங்களுக்குப் பதில் சொல்லப்போவதில்லை.

ஆகவேதான் நாங்கள் சர்வதேசத்திடம் நீதி கேட்டு நிற்கின்றோம். ஐ.நா மன்றிலே 36 ஆவது கூட்டத் தொடரிலிருந்து இன்று வரை நாங்கள் எமது உண்மை நிலையை எடுத்துக்கூறி சர்வதேசத்தின் ஊடாக நீதியைப் பெற ஆவலாக இருக்கின்றோம்.

எங்களது பூர்வீக நிலங்கள் மீட்கப்பட வேண்டும். அந்த இடங்களிலே நாங்கள் குடியேற வேண்டும். இன்று அகதிகளாக இடம்விட்டு இடம் மாறி நாங்கள் நாள்களைக் கழிக்கின்றோம்.

எங்களது பூர்வீக இடங்களிலே நாங்கள் வாழ வேண்டும். நாங்கள் பிறந்த மண்ணிலே நாங்கள் வாழ வேண்டும். – என வலியுறுத்தியுள்ளார்.

**(காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் பற்றிய செய்தி 08 ஆம் பக்கத்தில்)**

# பி.சி.ஆர். சோதனை செய்வதாக கூறி கொள்ளையில் சிலர் ஈடுபடுகின்றனர்

## எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸ் அறிவுறுத்து

பி.சி.ஆர் பரிசோதனைகளை செய்வதாகக் குறிப்பிட்டு கொள்ளையில் ஈடுபட்ட சந்தேக நபர்களை அடையாளம் காணுவதற்காக விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலையிலும் தங்களது திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளும் மோசடிகாரர்கள் சமூகத்தில் இருக்கின்றமையால், அது போன்ற சதி காரர்களிடமிருந்து பொது மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா என்று கண்டறிவதற்காக பி.சீ.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளப்போவதாக குறிப்பிட்டு கொள்ளையில் ஈடுபட்ட நபர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மஹாவ பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சென்றுள்ள இந்தக் கொள்ளையர்கள், வீட்டில் இருப்பவர்களுக்கு தாம் பொது சுகாதார பரிசோதகர்கள் என்றும், பி.சீ.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள வந்துள்ளோம் எனவும் குறிப்பிட்டே இவ்வாறு மோசடியில் ஈடுப்பட்டுள்ளனர்.

இதன்போது பெண்ணொருவர் உட்பட மூன்று பேர் சென்றுள்ளமையுடன், சந்தேக நபர்கள் வீட்டில் இருந்தவர்களுக்கு மருந்து வில்லை ஒன்றை வழங்கி அதனை அருந்துமாறும் தெரிவித்துள்ளனர்.

மருந்தை அருந்தியவுடன் வீட்டார் மயக்கமடைந்துள்ளனர். பின்னர் சந்தேக நபர்கள் கொள்ளையில் ஈடுப்பட்டுள்ளனர். இதன்போது மயக்கமுற்ற வீட்டார் நேற்று வெள்ளிக்கிழமை காலையிலேயே மீண்டும் சுயநினைவுக்குத் திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் வீட்டிலிருந்த மூன்றரை பவுன் தங்க நகைகள் இதன்போது கொள்ளையிடப்பட்டுள்ளன என வீட்டார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளமையுடன், இது தொடர்பில் மஹாவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, பி.சீ.ஆர். பரிசோதனைகள் செய்வதற்கு முன்னர் ஒருபோதும் மருந்து அருந்த வேண்டி தேவையில்லை என்று வைத்திய நிபுணர்களும், பொது சுகாதார பரிசோதகர்களும் தெரிவித்துள்ளனர்.

அதனால் பொதுமக்கள் இந்த விடயம் தொடர்பில் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இவ்வாறான நெருக்கடி நிலைமையையும் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் மோசடி காரர்கள் சமூகத்தில் இருப்பதால் மக்கள் இது போன்ற நபர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# அழைக்கப்பட்டவர்களைத் தவிர எவரும் திருமலை நீதிமன்றுள் நுழையத் தடை!

நீதிவான் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளவர்களைத் தவிர வேறு எந்த நபரும் திறந்த நீதிமன்றத்தினுள் நுழையக்கூடாது என திருகோணமலை நீதிமன்றம் அறிவித்தல் விடுத்துள்ளது.

நீதிமன்ற கட்டளைப்படி பதிவாளரால் திருகோணமலை நீதிமன்றத்திற்கு முன்னால் அறிவித்தல் ஒன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

தண்டப்பணம் விதிக்கப்படுகின்ற நபராலேயே அந்த தண்டப் பணத்தைச் செலுத்த முடியும் எனவும், நீதிவான் நீதிமன்றங்களில் விளக்கம், விசாரணை, புதிய வழக்குகள் தீர்ப்புக் கட்டளைக்காக நியமிக்கப்பட்டுள்ள வழக்குகளைத் தவிர்ந்த ஏனைய அனைத்து வழக்குகளும் கூப்பிடும் வழக்குகளுக்காக எதிரிகளோ அல்லது சந்தேக நபர்களோ திறந்த நீதிமன்றத்தினுள் சமுகமளிக்கத் தேவையில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்குகளில் அடுத்த வழக்கு திகதி பற்றிய அறிவித்தல் வழக்குத் தினத்தன்று காலையிலேயே அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்படும் எனவும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நீதிவான் நீதிமன்றத்துக்கு பிணை ஒப்பம் இடுவதற்காகக் காட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் வருபவர்கள் 10.30 தொடக்கம் 11.30 வரையான நேரத்தில் மாத்திரம் சமுகமளிக்க முடியுமெனவும் அறிவித்தல் பலகையில் திருகோணமலை நீதிமன்ற கட்டளைப்படி பதிவாளரால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இந்த அறிவித்தல் அமுல்படுத்தப்படும் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# மதுபான போத்தல்களுடன் பதுளையில் ஒருவர் கைது!

பதுளை பிராந்திய பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பணிப்பின் கீழ் பதுளை மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு தலைமையிலான குழுவால் நேற்று ஹாலிஎல கலவுட பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 180 மில்லீ லீற்றர் கொள்ளளவுடைய 50 மதுபான போத்தல்களை கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹாலிஎல கலவுட பிரதேசத்தில் கிராமிய உற்பத்தி பொருள்களான கித்துல்பாணி, கித்துல்கருப்பட்டி, மிளகு போன்ற பொருள்கள் விற்பனை செய்துவந்த வியாபாரியிடமிருந்தே இந்த மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது அந்த வியாபாரி பதுளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவர் பதுளை நீதிமன்ற நீதிவானிடம் முன்னிலைப்படுத்தவுள்ளார் என பதுளை மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# உயர் அதிகாரங்களைத் தனிப்பட்ட நலன்களுக்கு ஜனாதிபதி பயன்படுத்தக் கூடாது என்கிறார் கரு!

கொழும்பு, ஒக்.31

அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தின் ஊடாக தற்போது ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் மட்டுமீறிய அதிகாரங்கள், அதற்கு உரித்துடையவரை அடிமைப் படுத்தக் கூடியவையாகும்.

எனவே ஜனாதிபதி அதற்கு இரையாகாதவாறு அவதானத்துடன் செயலாற்ற வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்துக்கு அனுமதியளித்து சபாநாயகர் கையெழுத்திட்டவுடன் உலகிலேயே தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட உயர் அதிகாரங்களைக்கொண்ட ஜனாதிபதியொருவரை இலங்கை கொண்டிருக்கும்.

இவ்வாறான மட்டற்ற உயர் அதிகாரங்கள் தனிப்பட்ட நலன்களுக்காகப் பயன்படுத்தப்படாது என்று நம்புவதாக ஏற்கனவே தனது டுவிட்டர் பதிவொன்றில் கரு ஜயசூரிய குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை மற்றுமொரு டுவிட்டர் பதிவின் ஊடாக அவர் மேற்கண்டவாறு எச்சரித்திருக்கிறார்.